Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


MANOJ AIR TOURS (PVT) LTD.

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field.

உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெட்டுக்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038



மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 | தை 01 | ஹிஜ்ரி 1426 | துல்கஜ் 13 | (14.01.2006) | சனிக்கிழமை | இதழ் 106


# காவலரண்கள், முகாம்கள் மீது அடுத்த கட்டமாகத் தாக்குதல்!

## பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை

யாழ்ப்பாணம் —

அப்பாவி மக்களைத் தாக்குவதையும், சுட்டுக் கொலைசெய்வதையும், கைதுசெய்வதையும் சிங்கள இராணுவம் நிறுத்தாவிடின் - அடுத்த கட்டமாக காவலரண்களையும், சிறிய முகாம்களையும் தாக்குவோம் என பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொங்கியெழும் மக்கள் படை அனுப்பிவைத்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

தமிழ்மக்கள் தமது போராட்ட வரலாற்றில் தமக்கு எதிராகச் சூளுரைத்த பல சிங்களத் தலைவர்களையும், வீராப்புப் பேசி - போர்முரசு கொட்டிய இராணுவத் தளபதிகளையும் கண்டவர்கள். ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதல் பிரேமதாஸா, டிங்கிரி பண்டா விஜயதுங்க, சமாதானப் புறா சந்திரிகா வரை அனைவரும் எமது இனத்தை அழிப்பதற்கு கங்கணம்கட்டி நின்றவர்களே. இவர்கள் எங்கே போனார்கள்? இவர்களின் சூளுரைகளுக்கும், ஏவல்களுக்கும் என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் வெளிச்சம்.

அத்துலத்முதலி, ரஞ்சன் விஜேரட்ண, அனுருத்த ரத்வத்த போன்ற பாதுகாப்பு அமைச்சர்கள் தமிழ்மக்களுக்கு எதிராக விட்ட சவால்கள் யாவும் வெற்றுவேட்டுக்களாகிப் போனது வரலாறு.

பிரிகேடியர் வீரதுங்க முதல் கமில்டன் வணசிங்க டென்சில் கொப்பேக்கடுவ, றொகான் தளுவத்த, லயனல் பலகல்ல என விராப்புப் பேசி - போர்முரசு கொட்டி தமிழினப் படுகொலை புரிந்து தமிழ்மக்களை அடக்க (12 ஆம் பக்கம் பார்க்க)




# விடுதலைப் புலிகளின் முகாம் மீது திருமலையில் படையினர் தாக்குதல்

## 4 போராளிகளைக் காணவில்லை

திருகோணமலை —

திருகோணமலை - கடவானைக் குளத்தில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் மினி முகாம் ஒன்றின் மீது நேற்று மாலை படையினர் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலின் பின்னர் நான்கு போராளிகள் காணாமற் போயிருப்பதாகவும் முகாமுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுமாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் குறித்து மேலும் தெரியவருவதாவது -

திருகோணமலை மாவட்டத்தில் பாலம்போட்டாறுக்கு அருகில் உள்ள கடவானைக் குளத்தில் உள்ள புலிகளின் மினி முகாம் மீது படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் மீது நேற்றும்

# படையினர் மீது நேற்றும் கிரனேட் தாக்குதல்கள்!

## ஒரு கொன்ஸ்டபிள், 3 பொதுமக்கள் காயம்

யாழ்ப்பாணம் —

திருநெல்வேலி - ஆடியபாதம் வீதியில் நேற்று நண்பகலளவில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் கொன்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருநெல்வேலி - கல்வியங்காடு சந்திகளை இணைக்கும் ஆடியபாதம் வீதியில் நேற்றுப் பகல் 11.50 மணியளவில் சைக்கிளில் சென்ற பொலிஸார் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தார். பிரியந்த (வயது 46) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்தம் அமுலில் உள்ளதா?

## கேள்வி எழுப்புகிறது கண்காணிப்புக்குழு!

கொழும்பு —

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாடு தொடர்ந்தும் அமுலில் உள்ளதா? அவ்வாறெனில் தற்போது இடம்பெற்று வரும் தொடர் படுகொலைகள், தாக்குதல்கள் தொடர்பாக இருதரப்பினரதும் பதில் என்னவென போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கேள்வியெழுப்பியுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு கண்காணிப்புக்குழு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

செட்டிகுளத்தில் கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் - போர்நிறுத்த உடன்படிக்கைக்கு மீண்டுமொரு தடவை கொடுக்கப்பட்ட ஆபத்தான பேரிடியாகும். இத்தகைய தாக்குதல்களும் அல்லது பதில் தாக்குதல்களும் தொடருமெனில் போர்நிறுத்த உடன்படிக்கை முடிவுக்கு வந்துவிடுமென கண்காணிப்புக்குழு நம்புகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மல்லாகத்தில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம் —

மல்லாகத்தில் நேற்று மாலை 4 மணியளவில் இனந்தெரியாத நபர் களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

மல்லாகம் சந்திக்கும் நீதி மன்றத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பிரசாத் குமார (வயது 28) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தார். மேலும் ஒரு சிப்பாய் படுகாயங்களுடன் பலாலி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதிலும் அந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

இந்தத் தாக்குதலையடுத்து இரத்தினம் ஆனந்தராஜா என்ற 38 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தரை படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இடம்பெயரும் மக்களுக்கு உதவுமாறு வேண்டுகோள்!

கிளிநொச்சி —

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து பாதுகாப்புத்தேடி விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்குள் இடம்பெயரும் மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் - சர்வதேச தொண்டர் நிறுவனங்களி டம் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற, வன்னியில் இயங்கும் சர்வதேச உதவி நிறுவனங்களின் பிரதி நிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர், மேலும் தெரிவித்ததாவது - தமிழர் தாயகத்தில் அரச இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்அரச படையினர் நிகழ்த்தும் படுகொலைகள், கைதுகள், பாலியல் வல்லுறவுகள், துன்புறுத்தல்கள், காணாமற்போதல் என்பவற்றால் அச்சமடைந்து யாழ். குடாநாடு உட்பட தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலிருந்தும் நாளுக்கு நாள் தமிழ் பேசும் மக்கள் இடம் பெயர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் வந்தவண்ணமுள்ளனர்.

இடம்பெயர்ந்து வருகின்ற மக்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் பராமரித்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க அதிகாரிகள் குடாநாட்டுக்கு விஜயம்!

கொழும்பு —

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்து இரண்டு பேர் அடங்கிய அதிகாரிகள் குழுவொன்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக நேரில் மதிப்பீடு செய்தது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் இ ஒக்ஸ்லே, அரசியல் பிரிவைச் சேர்ந்த எவன்ஸ் வில்லியம்ஸ் ஆகியோரே குடாநாட்டுக்கான விஜயத்தை மேற்கொண்டனர்.

இந்த இரு அதிகாரிகளும் பலாலி படைத்தளத்தில் யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறியிடம் குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்துக் கேட்டறிந்ததுடன், இராணுவத்துக்கான அத்தியாவசிய (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை படையினரும் பொலிஸாரும் நிறுத்தவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

ஊடகவியலாளர்கள் மீது இராணுவத்தினரும், பொலிஸாரும் மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் உடன் நிறுத்தப்படவேண்டும். ஊடகவியலாளர்கள் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் அடையாள அட்டைகளைக் காண்பித்த பின்னரும் அவர்கள் மீது தாக்குதல்கள் நடத்துவது ஏன்? என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஊடகவியலாளர்களின் உயிருக்கு உலை வைக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. அத்தோடு ஊடகவியலாளரின் உரிமையில் தலையிடும் நிகழ்ச்சியும் தொடர்ந்து நடைபெறுகின்றன. வாள்முனையை விட தமிழ் பேனாமுனையின் வலிமை சிங்கள வல்லாண்மையைச் சிதறடித்து சின்னாபின்னப்படுத்துவதும் உறுதி. பொய்யும் புரட்டும் பொசுக்கப்படும் வாய்மை இறுதியில் வையத்தை ஆளும்.

ஊடக உரிமை என்பதை எவரும் எளிதில் புறக்கணித்து வெற்றிபெற்றதாக வரலாறு இல்லை. சிலரைப் பல காலம் ஏமாற்றலாம். பலரைச் சில காலம் ஏமாற்றலாம். ஆனால் தொடர்ந்து ஊடகவியலாளர்களை எவரும் ஏமாற்றி வெற்றிபெற்றதாக வரலாறு இல்லை. பத்திரிகைச் சுதந்திரம் என்பது ஒருவரின் அடிப்படை உரிமையாகும். அந்த உரிமையில் எவருக்கும் தலையிடும் அதிகாரம் இல்லை. தமிழ் ஊடகங்கள் எழுப்புகின்ற குரல் சிங்கள அரசுக்கு கசப்பாக இருக்கலாம். உண்மை பெரிதும் கசப்பாக இருப்பது தவிர்க்க முடியாதது.

செய்திகள் எப்பொழுதும் உண்மையாக அமையவேண்டும். ஆனால் அதை ஒட்டிய கருத்துக்களை எவரும் சுதந்திரமாக எழுதலாம். இதை ஆங்கிலத்தில் Facts are sacred but comment is free (செய்திகள் புனிதமானவை ஆனால் அவையொட்டிய கருத்துக்களை எவரும் சுதந்திரமாக வழங்கலாம்.

பத்திரிகை சுதந்திரம் பற்றிய மெய்யியல் வல்லுநர் தத்துவஞானி வோல்ரர் (Vortaire) கூறியுள்ள கருத்து நாம் எம் நெஞ்சில் ஆழமாகப் பதிக்க வேண்டிய கருத்தாகும். இதோ அவர் மொழிந்தவை - I do not agree win a word of what you say, but i'll defend to the death your right to say it திட்டமிட்டு தமிழர்களை ஒழித்துக்கட்டுகின்ற சிங்கள அரசு தமிழ்மக்களுக்காக ஓங்கிக் குரல் எழுப்பும் ஊடகங்களின் குரல் வளையையும் நசுக்க முனைந்துள்ளது.

தமிழ் ஊடகங்களில் கைவைத்த வெறிகொண்ட சிங்கள அரசு மகாராஜா கூட்டு நிறுவனத்தின் சிங்களத் தலைவரையே சிறையில் இருக்கும் சிறைக்கைதியின் துணைகொண்டு சாகடிக்க முனைவதாகவும் ஊடகங்கள் அனைத்திலும் வெளிவந்த செய்தி பரபரப்பை ஏற்படுத்தி அனைவரையும் கதிகலங்க வைத்துள்ளது.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடிக்குமாம் வெறிநாய் என்பதற்கமைய தமிழ் ஊடகவியலாளராகிய நடேசன், சிவராம் ஆகியோரைச் சாகடிக்கத் துணைநின்ற அரச உளவுப்படையும், ஆயுதக்குழுக்களும் ஒன்றிணைந்து சாகடித்த நிகழ்ச்சியை நாம் மறக்க முனைந்தாலும் முடியாது.

தமிழ் ஊடகவியலாளர்களில் கை வைத்த சிங்கள அரசு சிங்கள, ஆங்கில ஊடகங்களை இயக்குகின்ற சிங்கள தலைமைப்பீடத்தின் உயிருக்கே உலைவைக்கத் துடியாய் துடிக்கின்றது.

அரசின் போக்கைக் கண்டு நாம் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. கடந்த ஆண்டு மட்டும் உலகளாவிய அளவில் 41 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனரென நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடகவியலாளரைப் பாதுகாக்கும் அமைப்புத் தெரிவித்துள்ளது.

உலகமெங்கும் பரவிவரும் ஊடகவியலாளரை சாகடிக்கும் இக்கொடிய நோய் இலங்கையில் விஸ்வரூபம் எடுத்துள்ளது. சென்ற ஆண்டு கொழும்பில் சுடர் ஒளி நிறுவனத்துக்கு மூன்று தடவை குண்டுவீசப்பட்டது. இதில் சுடர் ஒளியில் பணிபுரிந்த பாதுகாவலர் சாகடிக்கப்பட்டார். இவர் தன் உயிரைக் கொடுத்து அச்செய்தி இதழின் ஆசிரியர் குழுவைக் காப்பாற்றினார். மற்றும் கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஊடக சுதந்திரம் பறிக்கப்பட்டதையொட்டி ஆர்ப்பாட்டம் நடந்தபோதும் செய்தி இதழ்களின் புகைப்படக்காரரும் தாக்கப்பட்டனர். அத்துடன் அவர்களின் புகைப்படக் கருவிகள் பறிக்கப்பட்டு சுக்குநூறாக்கப்பட்டன.

மேற்குறித்தவற்றையடுத்து அண்மையில் நமது ஈழநாடு நிறுவனத்துக்குள் அதிகாலையில் படையினர் புகுந்து அங்கு சோதனையின் பெயரில் பணிபுரிந்தோருக்குக் கொடுக்கப்பட்ட தொல்லைகள் எல்லைமீறியவையாக அமைந்தன. உதயன் நிறுவனத்திலும் இதே காட்சி நிகழ்ந்தது. தினக்குரல் பத்திரிகையில் பணிபுரியும் புகைப்படப்பிடிப்பாளர் அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்டார். வலம்புரி நிறுவனத்தையும் சுற்றிவளைத்து தொல்லைகொடுக்க அரசு முனைந்துள்ளதாக செய்திகள் எமக்குக் கிடைத்துள்ளன.

ஊடகவியலாளர் அமைப்புக்குள் ஆயிரம் வேறுபாடுகள் இருக்கலாம். சிங்களவர், தமிழர் என்ற இனவேற்றுமையும் தலைதூக்கலாகாது. எனினும் மாறுபட்டு, வேறுபட்டு, கூறுபட்டுக் கிடக்கும் இந்த ஊடகங்கள் ஒன்றுபட்டு குரல் எழுப்பத் தயங்கின் அவர்கள் தற்கொலை செய்யத் துணிந்து விட்டார்கள் என்றே பொருள் கொள்ளவேண்டும்.

குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் தமது பிரத்தியேக அடையாள அட்டைகளைக் காண்பிக்கின்ற போது அவற்றை பொலிஸாரும் படையினரும் அலட்சியம் செய்வது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். பத்திரிகையாளரை அவமதிக்கும் படையினரதும் பொலிஸாரதும் இந்தத் தப்பான போக்கு உடனடியாக நிறுத்தப்படும், என ஊடகத்துறை அமைச்சர் உறுதியளித்துள்ளார். அமைச்சர்களின் உறுதிமொழிகள் எல்லாம் காற்றோடு கலந்த நிலையில் இவரின் உறுதிமொழியை நம்புவதில் எமக்குப் பெரும் தயக்கம் உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் இந்த அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பத்திரிகை சுதந்திரத்துக்காக - ஊடகத்தின் உரிமைக்குரலுக்காக நாம் தொடர்ந்தும் குரல் எழுப்புவோம்.

நாம் எத்தகைய தியாகத்துக்கும் தயாராகவுள்ளோம் என்பதையும் இங்கு எடுத்துரைக்க விரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இலங்கை மெதடிஸ்த திருச்சபையால் வழங்கப்பட்ட மீன்பிடி வலை உபகரணங்களை மெதடிஸ்த திருச்சபையின் கட்டைவேலி பருத்தித்துறை முகாமைக்குரு அருட்திரு எஸ்.அழகராசா அடிகளார் கையளிப்பதைக் காணலாம். (12)

## 2 மாதகாலமாக திருத்தப்படாது உடைந்த நிலையில் பாலம்!

பருத்தித்துறை —

பருத்தித்துறை - தம்பசிட்டி வீதியில் நாவலடிச் சந்திக்கு சமீபமாகவுள்ள பாலம் உடைந்து நீண்ட நாளாகியும் இதுவரை திருத்தப்படவில்லை. இதனால் இந்த வீதியூடாகப் பயணம் செய்யும் மக்களும் வாகனச் சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இந்தப் பாலத்தின் ஒருபகுதி உடைந்து சேதமடைந்திருந்தது. இதன்பின்னர் அந்தப் பாலத்தின் மறுபக்கத்தினை போக்குவரத்துக்கு மக்கள் பாவித்தனர்.

தற்போது இரண்டு பகுதிகளும் உடைந்து சேதமான நிலையில் கற்களும் மண்ணும் போட்டு பாலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பாலத்தைத் திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் பாலம் அமைந்துள்ள வீதி சில வாரங்களுக்கு முன்னர் செப்பனிடப்பட்ட போதிலும் பாலத்தைத் திருத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போருக்கு

உடுவில் —

சுன்னாகம் மேற்கு நகர்ப்பகுதி ஜே/199 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 16 வயதுக்கு மேற்பட்டோருக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

தேசிய அடையாள அட்டையைப் பெற வருபவர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியும், போட்டோ பிரதியும், திருமணமான பெண்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துடன் திருமணப் பதிவுப் பத்திரத்தின் மூலப்பிரதியும் போட்டோ பிரதியும், 6 வர்ணப் படங்களும் -

புதிதாக அடையாள அட்டை பெறுவோர் 13 ரூபா முத்திரையும், தொலைந்த தேசிய அடையாள அட்டைக்கு 15 ரூபா முத்திரையுடன் பொலிஸ் பதிவுச் சான்றிதழ் மற்றும் சேவையிலுள்ளவர்கள் சேவை புரியும் நிறுவனத்தால் உறுதிப்படுத்திய கடிதத்துடனும் 6 வர்ணப் படத்துடனும் வருமாறு கிராம அலுவலர் கே. கனகநாயகம் தெரிவித்தார். (101)

## பதிவுசெய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்திலிருந்து வன்னிக்கு இடம்பெயரும் பாடசாலை மாணவர்கள் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவுசெய்யுமாறு அந்த நிறுவனத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவின் இணைப்பாளர் க.சீலன் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் முல்லைத்தீவு ஐயனார்கோவிலுக்கு முன்பாக உள்ள தொழிற்பயிற்சி நிலையம், கிளிநொச்சி - கனகபுரத்தில் அமைந்துள்ள கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிலையத்தின் தலைமை அலுவலகம், பாலிநகரில் அமைந்துள்ள கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றில் பதிவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினரின் மண் அணையால் பொதுமக்களுக்கு பெரும் சிரமம்!

வடமராட்சி —

அல்வாய் நாவலடிச் சந்தி வீதியில், வீதிக்கு குறுக்காக இராணுவத்தினர் அமைத்துள்ள மண் அணையால் அந்த வீதியூடாகச் செல்லும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாவலடிச் சந்தியிலிருந்து செல்லும் அனைத்து வீதிகளிலும் ஒன்றரை அடி உயரத்துக்கு இரு இடங்களில் வீதிக்குக் குறுக்காக இராணுவத்தினர் மண் அணை அமைத்துள்ளனர்.

நாவலடிச் சந்தியைக் கடந்து செல்லும் ஒவ்வொரு பயணியும் நான்கு மண் அணைகளைக் கடந்து செல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்த முகாம் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலின் பின்னர் இராணுவத்தினரால் இந்த மண் அணைகள் அமைக்கப்பட்டன. இதே வேளை, மாலைவேளையில் இந்த வீதியால் செல்லும் மக்களை இராணுவத்தினர் மிரட்டியும் வருகின்றனர்.

திருமறைக் கலா மன்றம்
நாற்பதாவது ஆண்டு நிறைவில் மற்றுமொரு புதிய ஆரம்பம்
கலைக்கோட்டம்
கட்டடத் தொகுதி திறப்பு விழா
இன்று 14.01.2006 சனிக்கிழமை மதியம் 12.00 மணி
இடம்: இல 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்
கலைக்கோட்டக் கட்டடத் தொகுதியில் நுண்கலைகளுக்கான 'கலைத்தூது அழகியல் கல்லூரி, குளிரூட்டப்பட்ட தங்கும் அறைகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள், பாசறைகள் நடத்துவதற்கான மண்டப வசதிகள் ஆகியன அமைந்துள்ளன.
எமது மண்ணின் கலைத்துறை மேம்பாட்டிற்கான ஓர் புதிய ஆரம்பமாக அமையவுள்ள இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி யாழ்ப்பாணம்.
(சி-5007)
இயக்குநர், அங்கத்தவர்கள் திருமறைக் கலாமன்றம்

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரசிகர்கள் அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்
அர்ஜுன், நமீதா, வடிவேல் நடித்த ஆணை
காட்சிகள் 10.00,1.00,4.00,7.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
ரசிகர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
இன்று முதல் பொங்கல் அதிரடி வெளியீடு
விஷால், மீரா ஜெஸ்மின் மற்றும் பலர் நடிப்பில்
சண்டக்கோழி
காட்சிகள்:- காலை 10.30, 2.30,5.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
ரசிகர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
இளைய தளபதி விஜய், திரிஷா (வருகிறான் வரிப்புலி நாதியாய்) மற்றும் பலர் நடிப்பில்
ஆதி
இயக்கம் ரமணா
தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்
இன்று முதல் எமது அதிரடி வெளியீடாக
அஜித், லைலா மற்றும் பலர் நடித்த பரமசிவன்
இயக்கம்:- பி.வாசு
காட்சிகள்;- 8.30, 12.00, 3.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
ரசிகப் பெருமக்களுக்கு எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
இன்றுகாலை பு.நே 9.30 க்கு மட்டும்
உங்கள் சத்தியராஜ் (இருவேடம்) சங்கவி, ஆனந்தராஜ் நடித்த அய்யர் IPS
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
சிம்பு, ஜோதிகா, பிரகாஸ்ராஜ் நடித்த சரவணா
இயக்கம் - K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சிகள்:-12.30,3.30மட்டும் (பு.நேரம்)

# போர்நிறுத்த உடன்பாடு நிலைக்க சமாதானப் பேச்சுக்கள் அவசியம்

## அமைதிக்கான ஆதரவுக்குழு

கொழும்பு —

இலங்கையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்க இரு தரப்பினரும் பேச்சுகளை நடத்த வேண்டியது அவசியம் என்று இலங்கையின் அமைதிக்கான ஆதரவுக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்த ஆதரவுக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

கடந்த டிசம்பர் 25 முதல் ஜனவரி 3ஆம் திகதிவரை வடக்கு-கிழக்கில் மட்டும் 40 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், அரச படையினர், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், பொலிஸார் எனப் பலரும் உயிரிழந்துள்ளனர்.

இத்தகைய ஆயுத நடவடிக்கைகளால் மக்களிடத்தில் பாதுகாப்பற்ற அச்ச நிலை உருவாகியுள்ளது. குற்றவாளிகளைத் தேடும் நடவடிக்கையால் கொழும்பு போன்ற இடங்களில் தமிழர்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உணர்ந்து வருகின்றனர்.

இந்த நிலைமைகளை முடிவுக்கு கொண்டுவர அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் உடனடிப் பேச்சுக்குத் திரும்ப வேண்டும். ஆயுதக் குழுக்களின் ஆயுதக் களைவு மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான போர் நிறுத்த ஒப்பந்த சரத்துகள் கடைபிடிக்கப்படவேண்டியது அவசியம்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஈடுபாட்டோடு செயற்படுத்த வேண்டும். இரு தரப்பினரது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சட்ட ஒழுங்கைக் காப்பாற்றி, மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுக்க வேண்டும். இதற்காக இருதரப்பும் நேரடிப் பேச்சுகளை உடனே நடத்தவேண்டும்.

புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டமை, திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுதல் தொடர்பாக அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை நீதியின் முன் அரசாங்கம் நிறுத்தவேண்டும்.

சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசாங்கம் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளின்போது கைது செய்யப் பட்டவர்களைச் சந்தித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ள தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

இராணுவத்தினரை ஆத்திரமூட்டும் ஆயுத நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் உடனே கைவிடவேண்டும்.

அமைதி முயற்சிகளை வலுப்படுத்தவும், அமைதிப்பேச்சுகளை முன்னெடுக்கவும் சர்வதேச சமூகம் முன்முயற்சிகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் சமூக செயற்பாட்டாளர்களான சுனில் அபயசேகர, சுனில் பஸ்தியான், சுனந்த தேசப்பிரிய, றோகான் எதிரிசிங்க, கேதீஸ் லோகநாதன், ஜெகான் பெரேரா, பாக்கிய சோதி சரவணமுத்து, ஜீவன் தியாகராஜா, ஜோ.வில்லியம், ஜாவீத் யூசுப் ஆகியோர் கையெழுத் திட்டுள்ளனர்.

# வெளிநாடுகளில் பிரச்சாரத்துக்கு 10 அமைச்சர்கள் கொண்ட குழு

கொழும்பு —

சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான அரசாங்கத்தின் செயற்பாடு மற்றும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாகச் சர்வதேச ரீதியில் பிரச்சாரங்களை முன்னெடுக்க சிரேஷ்ட அமைச்சர்கள் குழுவொன்றை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்ட மிட்டுள்ளார்.

பத்து சிரேஷ்ட அமைச்சர்கள் அடங்கிய குழுவே, வெளிநாடுகளுக்கு அனுப்பப்படவுள்ளது.

கடந்த பத்தாம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இது குறித்துத் தெரிவித்தார்.

பத்து சிரேஷ்ட அமைச்சர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி சமா தான முயற்சிகளில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்புக் குறித்தும், விடு தலைப்புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், சர்வதேச சமூகத்துக்குத் தெரிவிப்பதே இதன் நோக்கமாகும்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் சமாதான முயற்சிகளில் ஆர்வத்துடன் செயற்படும் நாடுகளுக்கும் இந்த அமைச்சர்கள்குழு அனுப்பிவைக்கப்படவுள்ளது. (தே)

# ஊர்காவல் படைக்கு 600 பேர் சேர்ப்பு!

திருகோணமலை —

திருகோணமலையில் மேலும் 600 ஊர்காவல் படையினரைச் சேர்க்கவுள்ளதாக கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் றோகான் அபயவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

ஊர்காவல் படைக்கு 300 பேர் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைத்து வீதித் தடைகளிலும் பணியில் ஈடுபடுத்தப்படுவர். இந்தப் பகுதியிலிருந்து ஊர்காவல் படைக்கான இளைஞர்கள் தெரிவுசெய்யப் படுவதால், பிரச்சினைகளை அவர்கள் நன்கு அறிவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதான முயற்சிகளில் அமெரிக்கா - சீனா - இந்தியா

## முயற்சிக்கிறாராம் மகிந்த

கொழும்பு —

இலங்கை அமைதி முயற்சிகளில் அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளையும் ஈடுபடவைக்க கொழும்பு கொள்கை வகுப்பாளர் மூலம் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் ஜாதிக ஹெல உறுமயவினருடனான நீண்ட நேரச் சந்திப்பின்போது அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை ஆதரிக்காத சிங்களவர், தமிழர், முஸ்லிம்களின் பாதுகாப்பு குறித்து, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் கேள்வி எழுப்பினார். இது தொடர்பாக அரசாங்கமும், சமாதான செயலகமும் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநர்களான - அலாவி மௌலானா, டிரோன் பொர்னாண்டோ, ரெஜி ரணதுங்க, டிக்ரி பண்டாரா, ஜகத் பாலசூரிய ஆகியோர் பங்கேற்றமை குறிப்பிடத் தக்கது.

# சுதந்திர தினத்தன்று எஸ்.பியை விடுதலை செய்யுமாறு கோரிக்கை

கொழும்பு —

இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையை அனுபவித்துவரும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை சுதந்திர தினமான எதிர்வரும் 4 ஆம் திகதி விடுதலை செய்யுமாறு ஐ.தே.கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜயசேகர, ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுவாகவே கைதியொருவர் மூன்று மாதம் சிறைவாசம் அனுபவித்தால் அவரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி நேரடியாக உத்தரவிடலாம்.

ஆனால், எஸ்.பி.திஸநாயக்க இந்தக் காலத்தைவிடக் கூடுதலாகச் சிறைவாசம் அனுபவித்துள்ளதால் அவரை விடுதலை செய்யவேண்டும் எனவும், அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற ஒரு கடிதத்தை முன்னர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு, மஹிந்த விஜயசேகர அனுப்பியபோதிலும், அவர் எஸ்.பியின் விடுதலைக்கு எந்த விதத்திலும் உதவவில்லை. எனினும் தனது கடித்ததைக் கருத்திலெடுத்து, ஜனாதிபதி எஸ்.பியை விடுதலை செய்வாரென நம்புவதாக மஹிந்த விஜயசேகர தெரிவித்தார்.

முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து மஹிந்த விஜயசேகர, எஸ்.பி.திஸநாயக்கவுடன், ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த சில நாட்களுக்குள் தாக்குதலுக்கு புலிகள் திட்டம்!

கொழும்பு —

அடுத்துவரும் சில தினங்களுக்குள் விடுதலைப்புலிகள், படையினருக்கெதிராக முக்கிய தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

இந்த தாக்குதல் மூலம் அரசாங்கத்திற்கு பாரிய அழுத்தத்தை ஏற்படுத்திய பின்னர், சமாதானப் பேச்சுக்கு வருவது புலிகளின் திட்டமெனவும் படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

குறித்த சில படை அதிகாரிகளை அல்லது முக்கிய அரசியல்வாதிகளைக் கொல்வதற்கோ அல்லது, பொருளாதார கேந்திர நிலையத்தின்மீது தாக்குதல் தொடுக்கவோ விடுதலைப் புலிகள் முயற்ச்சிக்கலாமென புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்திலுள்ள தமது சிரேஷ்ட உறுப்பினர்களை 14 ஆம் திகதி வன்னிக்கு வருமாறு அழைத்துள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (தே)

# சிங்கள அமைப்பின் ஹர்த்தால் திருகோணமலையில் பிசுபிசுப்பு!

திருகோணமலை —

திருகோணமலையில் வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு 3 நாட்களுக்கு விடுத்த ஹர்த்தால் தமிழர் பிரதேசங்களில் கடைப்பிடிக்கப்படாததால், பிசுபிசுத்துப் போனதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.


திருகோணமலையில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 5 மாணவர்களதும் மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்தக் கூடாதெனத் தெரிவித்து இந்த ஹர்தாலுக்கு சிங்கள அமைப்பு அழைப்பு விடுத்தபோதிலும், அது வெற்றியளிக்கவில்லை.

இதேவேளை, திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பொறுப்பதிகாரி ஆர்தர் டுவிற்றன் - 3 ஆம் கட்டையில் உள்ள தனது வதிவிடத்திலிருந்து உட்துறைமுக வீதியிலுள்ள அலுவலகத்திற்கு கடந்த புதன்கிழமை காலை 9.15 மணியளவில் சென்றபோது அவரது வாகனத்தை நோக்கி கல்வீசித் தாக்கிய சிங்கள அமைப்பினர், அவரைத் தடுத்து வாக்குவாதத்தில் ஈடு பட்டனர்.

இதனையடுத்து, அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்களை விரட்டியடித்து, அவரை அலுவலகத்திற்கு கூட்டிச் சென்றனர்.

இதேவேளை, திருகோணமலையில் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் தவிர ஏனைய செயற்பாடுகள் இடம் பெறுமெனப் பொங்குதமிழ் சமூகம் அறிவித்துள்ளது. (10)

# ஐ.தே.க மறுசீரமைப்பு திட்டம் கருவுக்கு புதிய அதிகாரங்கள்



கொழும்பு —

ஐ.தே.கட்சியை மறுசீரமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் கட்சியின் நிர்வாகம், வழிநடத்தல் நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களைச் செயற்படுத்தும் அதிகாரம் என்பவற்றை பிரதித்தலைவர் கரு ஜெயசூரியவிடம் ஒப்படைக்கவுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அனைவரதும் இணக்கப்பாட்டுடன் மறுசீரமைப்புச் செயற்திட்டத்துக்கு 1500 அங்கத்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் புதிய நிறைவேற்று சபையை அமைத்து, செயற்பாட்டு அதிகார சபையின் அதிகாரத்தைப் பரவலாக்கல் மற்றும் கொள்கைகளைத் தீர்மானிக்கும் சபையின் விரிவான அங்கத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் புதிய அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுத்தல் முறையை திருத்துவதற்கும் ஆலோசனை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

கட்சியின் மறுசீரமைப்புச் செயற்திட்டத்தின் கீழ், திருத்தம் செய்யப்படவுள்ள கட்சியின் பதவிகள், பெயர்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (தே)

# சொல்ஹெய்ம் வருகையுடன் சாதகமான நிலை உருவாகும்

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



கொழும்பு —

நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் வருகையின் பின்னர் சமாதானப் பேச்சுகள் தொடர்பான சாதகமான சூழ்நிலை உருவாகும் என்று அமைச்சரவைப்பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இந்தமாதம் இலங்கைக்கு வரவுள்ள எரிக் சொல்ஹெய்ம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்ய இருப்பதாகவும் அவர் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் நோர்வே பிரதிநிதிகள் வருகை தர இருப்பது இதுவே முதல் தடவை.


இவரின் வருகை மூலம் போர்நிறுத்த உடன்படிக்கை மீறப்படுவது மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்போதைய நிலைப்பாடு குறித்தும் அறிய முடியும்.

எரிக் சொல்ஹெய்ம் வருகைக்குப் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு சிறந்த சூழ் நிலையை உருவாக்க முடியும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்பதில் சகல அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## வி.பி கிண்ண முக்கோணத் தொடர்

# அவுஸ்ரேலியாவுடனான முதலாவது போட்டி 116 ஓட்டங்களால் இலங்கை அணி தோல்வி



சிட்னி —

அவுஸ்ரேலியாவில் நேற்று தொடங்கிய வி.பி.கிண்ணத்திற்கான முக்கோணத் தொடரின் அவுஸ்ரேலிய - இலங்கை அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 116 ஓட்டங்களால் இலங்கையைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி, அவுஸ்ரேலிய அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. இதன்படி கில்கிறிஸ்ட் மற்றும் கடிச் ஆகியோர் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். இவர்கள் இருவரும் அடித்தாட முற்பட்டவேளை, அணி 25 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - கில்கிறிஸ்ட் 13 ஓட்டங்களுடன் ருச்சித பெரேராவின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ ஆகி வெளியேறினார்.

இதனையடுத்து அணித் தலைவர் பொண்டிங் களமிறங்கினார். எனினும், அவரும் 13 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ருச்சித பெரேரா வின் பந்தில் போல்டானார்.

அடுத்து மார்ட்டின் இணைந்தார். இதில் கடிச் நிதான ஆட்டத்தைக் கடைப்பிடிக்க, மார்ட்டின் இலங்கை பந்துவீச்சாளர்களின் பந்துகளை விளாசித் தள்ளினார். இதனால் அவுஸ்ரேலிய ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது.

இந்த நிலையில் அணி 132 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், 78 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 60 ஓட்டங்களைப் பெற்றிருந்த கடிச் ரன் அவுட்டானார்.

இதனையடுத்து சைமன்ஸ் களமிறங்கினார். இவரும் தன் பங்குக்கு அடித்து ஆடினார். இதனால் அவுஸ்ரேலிய ஓட்ட எண்ணிக்கை அதிகரித்த அதேவேளை, இந்த இணைப் பாட்டத்தை பிரிக்க முடியாமல் இலங்கை பந்துவீச்சாளர்கள் திணறினர்.


இந்த நிலையில் 64 பந்துகளில் 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 70 ஓட்டங்களைப் பெற்றிருந்த மார்ட்டின் - டில்ஹார பெர்னாண்டோவின் பந்தில் போல்டானார். இவர் ஆட்டமிழந்தபோது, அணியின் ஓட்ட எண்ணிக்கை 238 ஆக இருந்தது.

அடுத்து மைக்கல் கிளார்க் களமிறங்கியபோதிலும், அணியின் ஓட்ட எண்ணிக்கை மாறாதிருக்கவே 61 பந்துகளில் 5 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 66 ஓட்டங்களைப் பெற்றிருந்த சைமன்ஸ், முபாரக்கின் பந்தில் டில்ஷானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.



அடுத்து கிளார்க்குடன் ஹூசே இணைந்தார். இவர்கள் இருவரும் இலங்கை பந்துவீச்சுக்களை துவம்சம் செய்தனர். இந்த நிலையில், 50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் கிளார்க் 38 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 45 ஓட்டங்களுடனும், ஹூசே 30 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.



17 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக் கொடுத்த இலங்கை பந்துவீச்சாளர்களில் - ருச்சித பெரேரா 2, டில்ஹார பெர்னாண்டோ மற்றும் முபாரக் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 319 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற மிகக் கடினமான இலக்குடன் இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக தரங்க மற்றும் முபாரக் இருவரும் களமிறங்கினர்.


இவர்களின் அனுபவமற்ற ஆரம்ப துடுப்பாட்டத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திய அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர் பிரெட் லீ, அணி 2 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் தரங்கவை 2 ஓட்டங்களுடனும், அணி 11 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் முபாரக்கை 1 ஓட்டத்துடனும் வெளியேற்றினார்.

இதனையடுத்து வன்டோட் மற்றும் சங்ககார இருவரும் பொறுப்புடன் ஆட முற்பட்டபோதும், சங்ககாரவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் 31 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 16 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் பிறாக்கனின் பந்தில் மார்ட்டினிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.


இதன்பின் டில்ஷான் இணைந்தார். எனினும், மறு பக்கத்தில் வன்டோட் பந்துகளை வீணடித்து ஒருநாள் போட்டியை டெஸ்ட் ஆட்டம் போன்று ஆடினார்.

இந்த நிலையில் 37 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த டில்ஷான் பிறாக்கனின் பந்தில் போல்டாகி வெளியேறினார்.

இலங்கை அணி 93 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து திணறியது. இதன்பின் ஜெயவர்த்தன வந்தார். இவர் அவுஸ்ரேலிய பந்துகளை அடித்து ஆடியதால், அணியின் ஓட்ட எண்ணிக்கை சற்று உயர்ந்தது. எனினும், அணி 118 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் டெஸ்ட் ஆட்டம் போன்று ஆடிய வன்டோட் ரன் அவுட்டானார். இவர் 117 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.



அடுத்து அத்தபத்து களமிறங்கினார். எனினும் அவரும் 11 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெற்றநிலையில் பிரெட் ஹொட்ஜின் பந்தில் கடிச்சிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.



இதன்பின் ஆர்னோல்ட் இணைந்து கொண்டார். எனினும், மறுமுனையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த ஜெயவர்த்தன, ஹொப்ஸின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 47 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவர் ஆட்டமிழந்த வேளை, அணி 176 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இறுதியில் இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றதனால் 116 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் ஆர்னோல்ட் 28, வாஸ் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் லீ, பிறாக்கன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், ஹொப்ஸ் மற்றும் ஹொட்ஜ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# இந்திய அணி வெற்றிபெறுமென எழுபது கோடி ரூபாவுக்கு பந்தயம்

மும்பை —

இந்திய கிரிக்கெட் அணி வேறு எந்த நாட்டுடன் மோதினாலும் இல்லாத மவுசு பாகிஸ்தானுடன் மோதும்போது ஏற்பட்டு வருகிறது.

இதன் காரணமாக இந்திய - பாகிஸ்தான் போட்டியின்போதுதான் கிரிக்கெட் சூதாட்டமும் கொடிகட்டிப் பறக்கிறது.

இப்போது நடைபெறும் போட்டிகளை வைத்து பல நூறு கோடி ரூபா சூதாட்டத்தில் புழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லாகூரில் நேற்று தொடங்கியுள்ள போட்டியில் இந்தியா வெற்றிபெறுமென இதுவரை 70 கோடி ரூபா பந்தயம் கட்டியிருப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன. மராட்டியம், மத்திய பிரதேசம், ஒரிசா, சதீஸ்கார் ஆகிய மாநிலங்களில்தான் சூதாட்டத்தில் பங்கு பெறுவோர் அதிகமாக உள்ளனர். இதற்காக 22 மையங்கள் செயற்படுகின்றன. அதன் தலைமை மையம் மும்பையில் செயற்படுகிறது.

இதன் நிர்வாகி ராஜா கூறும்போது - இந்தியா முழுவதும் சூதாட்டம் நடக்கிறது. இதை 12 அமைப்புகள் மூலம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறோம் என்று கூறினார்.

லாகூர் போட்டியில் ராவிட் மற்றும் டோனியின் ஆட்டத்தால் இந்திய அணி வெற்றிபெறுமென்று அவர்கள் கணித்துள்ளனர். அதேநேரத்தில் டெண்டுல்கர், கங்கூலி ஆகியோரின் ஆட்டம் எடுபடாது என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

# விளையாட்டு

# இந்திய-பாகிஸ்தான் அணிகளின் ருவென்ரி - 20 போட்டி இரத்து


லாகூர் —

இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதவிருந்த ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டி ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் மற்றும் உடைமைகளை இழந்தனர். அவர்களுக்கு உதவும் வகையில் இரு அணிகளும் ருவென்ரி - 20 போட்டியில் பங்கேற்க முதலில் ஒப்புக்கொண்டன. ஆனால், தற்பொழுது வீரர்கள் இடைவிடாமல் போட்டிகளில் விளையாடுவதால் அவர்களுக்கு ஓய்வு தேவையென இந்திய கிரிக்கெட் சபை இந்தப் போட்டிக்கு ஒப்புதல் அளிக்க கடைசி நேரத்தில் மறுத்துவிட்டது.

இதற்கு முன்பு பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகள் மோதிய ஒருநாள் தொடரில் ரிக்கெட் மூலம் கிடைத்த பணத்தை அந்த நாட்டு கிரிக்கெட் சபை நிவாரண நிதியாக வழங்கியுள்ளது. அதுபோல கராச்சியில் நடைபெறவுள்ள கடைசி ஒருநாள் போட்டியில் ரிக்கெட் மூலம் கிடைக்கும் வருவாயை நிவாரண நிதியாக வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

# இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட்; பாகிஸ்தான் அணி வலுவான நிலையில்



லாகூர் —

3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய அணி நேற்று லாகூர் கடாபி மைதானத்தில் தனது முதலாவது டெஸ்ட் போட்டியை பாகிஸ்தானுடன் தொடங்கியது. நேற்றைய ஆட்டநேரமுடிவில் பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 326 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

நேற்று தொடங்கிய முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் கௌதம் காம்பீருக்குப் பதிலாக கங்கூலிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன்படி இந்திய அணியில் - ராவிட் (கப்டன்), ஷேவாக், கங்கூலி, டெண்டுல்கர், லக்ஷ்மன், யுவராஜ் சிங், டோனி, பதான், அகர்கர், கும்ளே, ஹர்பஜன் சிங் ஆகியோர் இடம்பெற்றனர்.

பாகிஸ்தான் அணியில் - இன்சமாம் (கப்டன்), சல்மான் பட், சொகைப் மலிக், யுனுஸ்கான், மொகமட் யூசுப், அப்ரிடி, கம்ரன் அக்மல், அக்தர், மொகமட் சமி, நவீட் உல்-ஹசன், டனேஷ் கனேரியா ஆகியோர் இடம்பெற்றனர்.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் - தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார். இதன்படி தொடக்க வீரர்களாக சல்மான் பட், சொகைப் மலிக் ஆகியோர் களமிறங்கினர்.


ஆட்டத்தின் 3ஆவது ஓவரில் பாகிஸ்தானின் தொடக்க ஜோடி பிரிந்தது. சொகைப் மலிக் பந்தை அடித்தவேளை, எதிர்முனையில் நின்ற சல்மான் பட், ஓட்டமொன்றை எடுப்பதற்காக ஓடினார். எனினும், யுவராஜ் சிங் விக்கெட்டை நோக்கி எறிந்த பந்தினால் சல்மான் பட் 6 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார்.

இதனையடுத்து 2ஆவது விக்கெட்டுக்கு சொகைப் மலிக்குடன் யுனுஸ் கான் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியைப் பிரிக்கமுடியாமல் இந்திய பந்துவீச்சாளர்கள் திணறினர்.



மதிய உணவு இடைவேளையின்போது - பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டை இழந்து 110 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மதிய உணவு இடைவேளையின் பின்னர் இந்த ஜோடி தொடர்ந்து ஆடியது. எனினும், அணி மேலதிகமாக 26 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - 145 பந்துகளில் 7 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த சொகைப் மலிக், பதானின் பந்தில் ஹர்பஜனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.



இதனையடுத்து மொகமட் யூசுப் இணைந்து கொண்டார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடினர். ஒரு முனையில் நின்ற யுனுஸ் கான் சதமடித்தார். இந்திய அணித் தலைவர் பந்துவீச்சாளர்களை மாற்றி இந்த ஜோடியைப் பிரிப்பதற்கு எடுத்த முயற்சியும், நேற்றைய ஆட்டநேரம் முடியும்வரை வீணாகியே போனது.

இந்த நிலையில் நேற்றைய ஆட்ட நேரமுடிவில் பாகிஸ்தான் அணி 85 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 326 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது. இதில் யுனுஸ்கான் 243 பந்துகளில் 19 பவுண்டரிகள் அடங்கலாக 147 ஓட்டங்களையும், மொகமட் யூசுப் 124 பந்துகளில் 10 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 95 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதுள்ளனர்.

பந்துவீச்சில் பதான் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார்.

# புத்திவுள்ள கோமாளித்தனம்

முன்னொரு காலத்தில் புதுமையான விதிமுறையொன்றைக் கடைப்பிடித்து ஆட்சி செய்து வந்தார் ஒரு அரசன். அவருக்குத் தும்மல் ஏற்படும் வேளைகளில் அவரைச் சூழ்ந்திருப்போர் ''உங்களுக்கு நல்ல ஆரோக்கியம் நிலவட்டும்'' எனக் கூறவேண்டுமென்ற உத்தரவை விதித்திருந்ததால் அனைவரும் அதைப் பின்பற்றினர். ஆனால் இடையன் மட்டும் இதை மறுத்து வந்தான்.

ஒருநாள் இடையன் அரசசபையிலிருந்தபோது உரத்த சத்தத்துடன் 'அச்சூ' என்ற தும்மல் அரசனுக்கு வந்தது. உடனடியாகவே இடையனைத் தவிர அங்கிருந்தோர் அனைவரும் தங்களுக்கு நல்லாரோக்கியம் நிலவட்டும் என ஒருமித்த குரலில் கூறினர்.



மௌனமாக நின்றிருந்த இடையன் மேல் அரசன் சினங்கொண்டு கத்தினான். உங்களுக்கு நல்லாரோக்கியம் நிலவட்டும் எனக் கூறு என்றதற்கு. எனக்கு நல்லாரோக்கியமாகட்டும் என்றான்.

இல்லை தனக்காக அதைக்கூற வேண்டும் என்றபோது, எனக்காக என்று மீண்டும் பதிலளித்தான். என் நலனுக்காக மட்டுமே அதைக்கூறு என உறுமிய அரசனைப் பார்த்து, கைகளைத் தன் மார்பு மீது பதித்து, நிச்சயமாக என் நலனுக்கு மட்டுமே என்றதும் தலைமை அமைச்சர் அங்கு வந்து மேன்மை தங்கிய மகாராஜாவின் நல்லாரோக்கியத்திற்காக என்றே நீ கூறவேண்டும். இல்லா விட்டால் உன் தலை துண்டாடப்படும் என்றார்.

உங்கள் மகள் இளவரசி எனக்கு மனைவியாக வந்தால் மட்டுமே அதைக் கூறுவேன் என்றான் இடையன்.

தந்தையாருக்கருகில் நின்றிருந்த இளவரசியும் இடையனின் வார்த்தையால் கவரப்பட்டவளாய் புன்னகைத்தாள்.

அதிக சினங்கொண்ட அரசன், வெண்கரடிக் குழிக்குள் அவனைத் தள்ளிவிடுமாறு உத்தரவிட்டான்.

குழிக்குள் தள்ளி விடப்பட்டவேளை, பசியால் வாடிய அந்த பெண் கரடி அசையாமல் படுத்திருந்தது. கரடியின் முகத்தை நேராக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் இடையன். கூர்மையான ஒளிபொருந்திய அவனது கண்களின் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாத கரடி எழுந்து போய் மூலைக்குள் பதுங்கியது.

தன் கண்களின் சக்திபற்றி அறிந்திருந்த இடையன் பயந்த மிருகத்தையே பொழுது புலரும்வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் இன்னமும் உயிருடனிருப்பதைக் கண்ட அமைச்சர் வியப்புற்றார். இடையன் அரசனிடம் அழைத்துச்செல்லப்பட்டான். சாவு எப்படியானதென்பது இப்போது உனக்கு விளங்கியிருக்குமே! உங்களுக்கு நல்லாரோக்கியம் நிலவட்டும் என்று இப்போது சொல் பார்க்கலாம் என்றார் மன்னர். இல்லை. இளவரசி என் மனைவியாகும்வரை என்னால் கூறமுடியாது என்றான்.

''கடித்துக்குதறும் பத்துக் காட்டுப்பன்றிகளுள்ள கூண்டுக்குள் இவனைத் தூக்கிப் போடுங்கள்'' என அடுத்த தண்டனைக்கு உத்தரவிட்டார் அரசர்.

பத்துநாட்களுக்கும் மேலாக பட்டினிகிடந்த காட்டுப்பன்றிகள் கூண்டுக் கதவு திறந்ததும், மூர்க்கத்தனமாக இடையன் மீது பாய ஆரம்பித்தன. பத்து மிருகங்களையும் ஒரே நேரத்தில் உற்றுப்பார்ப்பது இயலாத விடயமென்றெண்ணிய அவன் தன் இடுப்பிலிருந்த புல்லாங்குழலை உருவி இசைக்க ஆரம்பித்தான். இதனால் குதூகலமடைந்த பன்றிகள் கால்களை முன்னும் பின்னுமாக உதைத்து ஆட்டம் போட்டன. புல்லாங்குழல் இன்னும் மிக வேகமாக ஒலிக்க ஒலிக்க பன்றிகளும் வேகமாகவே ஆட்டம் போட்டன. நடுநிசியாகிவிட்டது. நடனமாடிய களைப்பு அவைகளைக் குவியலாகப் படுத்து உறங்கச் செய்தது.

காலையில் அவன் அட்டகாசமாகச் சிரித்த சிரிப்பு அமைச்சரை அங்கு ஓடிவரச் செய்தது. அரசன் முன் நிறுத்தப்பட்ட இடையனைப் பார்த்து, நீ இன்னமும் உயிருடன் இருக்கிறாயா? கிட்டத்தட்ட பத்து மரணங்களுடன் விளையாடிவிட்டாய், இப்போதாவது கூறு, உங்களுக்கு நல்லாரோக்கியம் நிலவட்டுமென்று.

எனக்குரியவளாக, என் மனைவியாக இளவரசி வரும் வரையில் அது சாத்தியமாகாது என்றான்.

இப்போது இருண்ட ஆழத்தான இடத்துக்கு இடையன் அழைத்து வரப்பட்டான். மிக ஆழமான கிணறு. நடுவிலும் அதன் பக்கங்களிலும் கூரிய வாள்கள் நாட்டப்பட்டுக் காணப்பட்டன. அந்த வாள்கள் சிறு விளக்கின் ஒளியோடு மினுங்கின. அதற்குள் தான் வீசப்பட்டால் ஏற்படும் பயங்கரம் எப்படியிருக்கும் என்பதை அவன் உணர்ந்து மனம் மாறி விடலாம் என்ற காரணத்துக்காக அவனை அங்கே விட்டிருந்தனர். தனிமையாக்கப்பட்ட அவன் தளர்ந்தபோதும் தன்மேலாடைகளையும் தொப்பிகளையும் நீண்ட தடியொன்றில் திணித்து விட்டான். மங்கலான ஒளியில் அது ஒரு உடலைப்போன்று காணப்பட்டது. பின் காவலர்களை அழைத்து



அரசனின் விருப்பப்படி என்னால் கூறஇயலாது என்று கூறினான். ஆனால் இடையனோ ஒரு மூலையில் பாதுகாப்பாக மறைந் திருந்தான்.

உள்ளே வந்த காவலர்கள் அத்துணிக் கட்டைக் கிணற்றுக்குள் தள்ளி வீழ்த்தினர். தள்ளும் போதே அவனைத் தாங்கள் இறுதியில் அழித்தொழித்துவிட்டதாகச் சந்தோஷப்பட்டனர்.

மறுநாள் காலை இடையனை உயிருடன் கண்ட அமைச்சர் ஏறக்குறைய மயங்கும் அளவுக்கு வந்துவிட்டார். அதேநேரம் அரசனோ, திரும்பவும் இடையனை நோக்கி இப்போதாவது சொல் பார்க்கலாம் என்றார்.

இளவரசி எனக்குரியவள் என்பது இல்லாதவரை அது முடியாது என்று திரும்பவும் கூறினான். அவனைப் பயமுறுத்திப் பணியவைக்கவோ, பேச வைக்கவோ முடியாதிருப்பதையும், அதற்கு வேறு வழிகள் இல்லாதிருப்பதையும் கண்டு கொண்ட அரசன், அவனைத் தன்னுடன் நீண்ட பயணத்துக்கு அழைத்து, தங்கக் கோட்டையையும், வெள்ளிக்காட்டையும், வைரத்தடாகத்தையும் பரிசாகக் கொடுத்துவிட விரும்பினார். அவைகளையும் அவன் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. இளவரசியைத் தனக்குக் கொடுத்தால் மட்டுமே அதைக் கூறுவதாக மீண்டும் வலியுறுத்தினான்.





துருவன்

## வந்ததே பொங்கல்...

வந்தது வந்தது தைப்பொங்கல்
வா! வா! என்றதை வாழ்த்திடுவோம்
துன்பங்கள் தீர்த்திட வேண்டிடுவோம்
தீமைகள் அகன்றிடக் கேட்டிடுவோம்.

சர்க்கரைப் பொங்கல் பொங்கிடுவோம்
கரும்பு கற்கண்டு பழவகைகள்
விரும்பி அவைகளைப் படைத்திடுவோம்
விருந்தினர்க் களித்து மகிழ்ந்திடுவோம்.

மைகள் யாவர்க்கும் கிடைத்திடவே
விதாய்ப் பொங்கல் பொங்கிடுவோம்
மூவிலும் இன்பம் பொங்கவென்று
ாழ்த்தியே பொங்கலை வரவேற்போம்.



## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :...............................
கற்கும் பாடசாலை :...............................
கற்கும் தரம் :...............................
வீட்டு முகவரி :...............................
பிறந்த திகதி :...............................
ஆர்வமுள்ள துறைகள் :...............................

............... திகதி ............... ஒப்பம்

............... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............... பெற்றோர் ஒப்பம்

## மாம்பழம்

எவரையும் கவரக்கூடிய சுவையான மாம்பழங்கள் கிட்டத்தட்ட 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தென் கிழக்காசிய நாடுகளில் உணவாகக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்துக்கள் மாமரத்தை புனித மரமாகக் கருதி ஆண்டாண்டு காலங்களாகப் பயன்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியா உலகின் மிகப்பெரிய மாம்பழ உற்பத்தியாளராகவும், உலக நாடுகளுக்கான ஏற்றுமதியாளராகவும் விளங்கி வருகிறது.

பல்வேறு வகையான, பல்வேறு சுவையுடைய வாசனையுடைய மாம்பழங்கள் இலங்கையில் உற்பத்தியாகின்ற போதிலும் யாழ்ப்பாணம் போன்ற வடபகுதியில்தான் சிறந்த சுவையான பழங்களைப் பெற முடிகிறது. ஒவ்வொரு மாம்பழத்திலும் விற்றமின் A யும் Cயும் மட்டுமல்லாது, இரும்பு, பொட்டாஸியம் மற்றும் beta carotene போன்ற சத்துப் பொருட்களும் அடங்கியுள்ளன. இன்று மாம்பழத்தைப் பயன்படுத்தி ஐஸ்கிறீம், பழக்கலவை, புடிங்ஸ் போன்ற உணவுப் பதார்த்தங்களும் செய்யப்படுகின்றன.

## நேரம்

நேரம் எமக்கு மிகமுக்கியமானதாக இருக்கிறது ஏன் தெரியுமா?

எமது அலுவல்களை முடிப்பதற்கும் பயணங்களை மேற்கொள்வதற்கும் அது எம்மைத் தயார்படுத்துகிறது. நேரம் ஒருபோதும் எமக்காகக் காத்திருக்காது.

பாடசாலை செல்லும் நாங்கள் பஸ்ஸைப்பிடித்து உரிய நேரத்திற்குச் சென்றடையவும், பரீட்சைக்குத் தோற்றவும், வீட்டுப் பாடங்களைச் செய்யவும் உதவுகிறது. நேரம் என்பது எதுவித நிறுத்தமுமில்லாது, ஒய்வற்று எவருக்காகவும் காத்திராமல் ஓடியவண்ணம் இருப்பதால், எமது வேலைத் திட்டங்களை அதன் ஒழுங்குக்கமைய நிறைவேற்றி வாழ்வை மேம்படுத்துவோமாக.

## சிரியுங்கள்



க. முள்ளம்பன்றிகள் முத்தமிடும் பாது எந்த மாதிரியான ஓசை முப்புகின்றன?

ப. 'அவுச்'

* * *

கே. ஒரு மீன் மற்றொரு மீனுக்குக் கூறுவதென்ன?

ப. வாயை மூடிவைத்துக்கொண்டிருந்தால் ஒருபோதும் நீ பிடிபடமாட்டாய்.

* * *

கே. டேவிட்டின் தந்தைக்கு மூன்று மகன்கள் உள்ளனர். யேசுதாஸ், மரியதாஸ் அடுத்தவர் ............?

ப. டேவிட்!

* * *

கே. ஆங்கில அகராதியில் இருக்கும் மிக நீண்ட வார்த்தை எது?

ப. Smiles என்ற வார்த்தைதான். முன்னாலும் பின்னாலும் உள்ள S களை நீக்கிவிட்டுப் பாருங்கள் - Mile வருகிறது.

* * *

கே. ஒரு மனிதர் தலைக்குப் பாதுகாப்பின்றி கொட்டும் மழையில் சென்றுகொண்டிருந்தார். ஒரு தலைமயிர்கூட அவருக்கு நனையவில்லை. எப்படி?

ப. மொட்டைத் தலை

## முட்டாள் அரசன்

மதனபாபு என்ற அரசன் விவேகத்தில் தன்னைவிட்டால் வேறு யாரும் கிடையாது என்ற மமதையிலிருந்தான்.

ஒருநாள் காட்டில் வேட்டையாடச் சென்றான். வேட்டையாடி முடிந்ததும் பசியெடுத்ததால் எதையாவது சாப்பிட வேண்டும் போலிருந்தது. திடீரென அவன் முன்னால் அருகிலிருந்த மரத்திலிருந்து மாம்பழமொன்று விழுந்தது. அதைக்கண்டு மகிழ்ந்த அரசன் மாங்கொட்டை மட்டும் மீதமாகும் வரையில் எல்லாவற்றையும் உண்டான். 'மாங்கொட்டையைக் கையில் பிடித்தபடி ஆத்திரத்தில் அரசன் இவ்வாறு உளறினான்: மாம்பழத்தைப் படைத்த ஆண்டவன் உண்மையில் ஒரு முட்டாளாக இருக்கிறான். மாம்பழத்தைப் போல் மாங்கொட்டையையும் இனிப்பாகப் படைத்திருந்தால் அதையும் சாப்பிட்டிருப்பேனே' என உரத்துக் கூறினான்.



இதைக்கேட்டு அரசன் முன்னால் வந்த நித்தியானந்தர் என்ற துறவி, "கடவுள் முட்டாளல்ல நீதான் முட்டாள்" என்று புன்னகைத்தவாறு அரசனிடம் கூறினான்.

சில வருடங்களுக்கு முன் நான் இந்தக் காட்டுக்குள் வந்த போது, உங்களைப் போன்று பசியாலும், இளைப்பாலும் நான் கூட ஒரு மாம்பழத்தைப் பெற்றேன். கடினமான கொட்டையைப் பழத்துடன் வைத்துப் படைத்ததையிட்டு, நான் கூட கடவுள் ஒரு முட்டாள் என எண்ணினேன். அதன்பிறகு, அந்த விதையை நாட்டி நீர் ஊற்றியதால் அந்த விதை பெரிதாகி, வெடித்துத் தாவரமாகியது. அத்தாவரம் வளர்ந்து பெருமரமாகி, ஆயிரக்கணக்கிலான பழங்களைத் தன்னகத்தில் கொண்டிருந்தது. சில நிமிடத்தின்முன் நீங்கள் சாப்பிட்ட பழமும் அதே மரத்திலிருந்து விழுந்த ஒன்றுதான். கொட்டையில்லாத பழத்தை அப்போது நான் பெற்றிருந்தால், இப்போது உங்கள் பசியைப் போக்க ஒருபழம் உங்களைத் தேடி வந்திருக்குமா? இப்போது கூறுங்கள் யார் முட்டாள்? நீங்களா? கடவுளா? என்றார் துறவி.

நித்தியானந்தரின் அறிவுரை கேட்ட மதனபாபு மன்னர் தன் தவறை உணர்ந்தார். துறவிக்குச் சிரம் தாழ்த்திவிட்டு தன் அரண்மனைக்குத் திரும்பினார்.

ஏஏ

## நாம் எங்கு தான் போவது?

காலைப்பொழுது புலர்ந்தது. புல்டோசர் இயந்திரத்தின் பாரிய சத்தம் காட்டில் வாழும் அனைத்து விலங்குகளையும் காட்டின் அமைதியையும் குலைத்துக்கொண்டிருந்த போது நித்திரையிலிருந்து விழித்துக் கொண்ட மனோகரி என்ற குரங்கு அதற்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டது.

ஆம்! அங்கே மீண்டும் மனிதர்கள்! அவைகளின் தாயக பூமியான காட்டின் ஒரு பகுதி இப்போது அழித்து ஒதுக்கப் பட்டுக் கொண்டிருந்தது. அழிக்கப்பட்ட காடுகளில் அண்மைக் காலத்திலிருந்து புதிய புதிய மனித இல்லங்கள் முளைக்கத் தொடங்கி விட்டன.

ஒரு காலத்தில் தங்கள் வாழ்விடம் மிகப் பரந்து பாரியதாக இருந்த போது மரங்களும், பழங்களுமாக நிறைந்து வாழ்வு வளம் பெற்றிருந்ததை எண்ணிக் கலங்கின. அனேக விலங்குகள் மற்றும் முயல்கள், நரிகள், முள்ளம்பன்றிகள் போன்றவற்றின் இயாக பூமிதான் இப்போது அழிக்கப் பட்டு வரும் காடாகும்.

மனோகரியும் தன் மகனான திரிபுரனிடம், மனித நடமாட்டமுள்ள இடங்களைத் தவிர்த்து வேறிடங்களில் உலவுமாறு அறிவுறுத்தியிருந்தது.

கண்களைக் கசக்கிக்கொண்டு துயிலெழுந்த திரிபுரன் அப்போது வெட்டித் துப்புரவு செய்யப்படும் நிலப்பகுதியைப் பார்த்து, அம்மா ஊரத்துக்கப்பாலுள்ள மரங்களில் தான் நான் இருக்க வேண்டுமா எனக் கேட்ட சமயம், கீழே, யாரோ உரத்த குரலில் விம்மியழும் ஓசை கேட்டது. யூலி என்ற முயலார் அழுது கொண்டிருந்தார். ஏன் அழுகிறாய்? என மனோகரி கேட்ட போது, எங்களுக்கு உணவைத் தரும் அனைத்து வளங்களையெல்லாம் அந்த மனிதர் அழித்து வருவதால் எமக்கு வாழ்விடமே அற்றுப் போகிறது. நான் தோட்டமொன்றுக்கு அண்மையில் சென்ற போது, நாய்களிடமிருந்து தப்பிவரப் பெரும்பாடாகி விட்டது. இந்நிலையில் எப்படி நாம் வாழ முடியும்? என்று மீண்டும் அழுதது.

யூலி! அதற்காக நாங்களும் வருந்துகிறோம். இந்த மனிதர்கள் பார்வையிலிந்தும் விலகி இருப்பதற்கு நீ தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தவேண்டும். கடந்த வாரம் முள்ளம் பன்றியைத் துரத்திச் சென்று மிகக் கிட்டத்தில் பிடித்து விட்டனர். நான் கூட கொஞ்சம் பலாப்பழம் எடுப்பதற்குத் தோட்டத்தினுள் பாய்ந்தபோது, என்ன நடந்தது? என அவசரப்படுத்தினார் செங்கோடன் என்ற நரியார். நாய்கள் தொடர்ச்சியாகக் குரைத்துக் கொண்டிருந்தன. வெளியில் வந்த மனிதன் என்னைப் போய்விடுமாறு கத்தினான் என்றாள் மனோகரி.

நீண்ட காலமாக நாம் இங்கிருந்தது பற்றி அவர்களுக்கும் தெரியும். அதை அவர்கள் உணர்வதாக இல்லை. கற்களால் வீசி அடித்து விட்டார்கள் என்று தன் காயத்தையும் காட்டினாள். அப்படி எதற்காக அவர்கள் செய்ய வேண்டும் அம்மா? என்றது திரிபுரன். அந்தப் பழங்கள் மிக உயரத்திலிருப்பதால் அவர்களால் அதைப் பிடுங்க ஏற முடியாதிருக்கிறது.

அதுதான் உண்மை. இந்த மனிதர்கள் எதையும் பகிர்ந்து கொடுக்க விரும்பாதவர்கள். அப்பழங்கள் அழுகிவிழுந்தாலும் ஒன்றுக்கும் உதவாததாகிவிடும். அதையும் விட நாம் அவைகளை உண்பதற்கு விரும்பமாட்டார்கள். எங்களிலிருந்துதான் தாம் தோற்றம் பெற்றதாக கூறிக்கொள்கின்ற அதேவேளை, நாமே உயர்ந்த இனத்தவர் என்பதை நான் ஒப்புக்கொள்வேன். எவருக்கும் தீங்கில்லாமல் வாழ்கிறோமல்லவா? எங்களுடன் சமாதானமாக வாழத் தெரியாதவர்கள் தங்களுக்குள் சண்டை போடாமல் இருக்கமாட்டார்கள். அவர்களுக்குள் சமாதானமே இல்லையே, மனித நடவடிக்கைகளைச் சில யார் ஊரத்துக்கப்பாலிருந்தவாறு அவதானித்தபடி தங்களின் எதிர்காலம் குறித்த கேள்வியிலும், கவலையிலும் ஆழ்ந்து காணப்பட்டன. மரங்கள் வெட்டும் ஓசைகளிடையே ஒரு மரம் விழுந்தசத்தம் அவைகளை வாட்டி வருத்திக்கொண்டிருந்தது.

ஏஏ

# நல்வார்த்தைகள்

- அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்.
- பந்தயத்தை மனதுக்குள்ளேயே பயிர் செய்பவன்
- பாம்பை மனதில் வளர்க்கிறான்.
- கடன்படுதல் வலைக்குள் சிக்கிக்கொள்வதாகும்.
- ஒரு பாவம் நூறு பாவங்களை அதன்பின்னே இழுத்துச் செல்லும்.
- உன்னை வஞ்சித்தவனை ஒருபோதும் நம்பாதே.
- தீராத வழக்குக்குத் தெய்வமே துணை.
- வறுமை அறிவாளியாக்கும். ஆனால் செல்வந்தன் ஆக்காது.

J. நிசாந்தன்
தரம் 09
யா/பத்திரிசியார் கல்லூரி

# ஒரே எழுத்து இதோ கருத்து

| | |
|---|---|
| வரவேற்கும் எழுத்து | - வா |
| விரட்டும் எழுத்து | - போ |
| பால்தரும் எழுத்து | - ஆ |
| பறக்கும் எழுத்து | - ஈ |
| அணைக்கும் எழுத்து | - கை |
| சிம்மாசனத்தில் அமருவது | - கோ |
| கேட்கும் எழுத்து | - தா |
| இகழும் எழுத்து | - சீ |
| எரியும் எழுத்து | - தீ |
| மணக்கும் எழுத்து | - பூ |

மகேந்திரன் சிவகௌரி
தரம் 07

# தெரிந்துகொள்ளுங்கள்

√ சுறாவின் எலும்புக்கூடு கனத்த எலும்புகளின்றி குருத்தெலும்புகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன.

√ நான்கு முழங்கால்களைக் கொண்டுள்ள ஒரேயொரு மிருகம் யானை தான்.

√ மனிதரை கைவிரலடையாளம் மூலம் கண்டு பிடிப்பது போல மூக்குப் பகுதி (nose prints) அடையாளத்தை வைத்தே கால் நடைகளைக் கண்டறியலாம்.

√ ஐஸ் கட்டிகளில் ஒரு வகையானவை காய்ந்த ஐஸ் வகையாகும். இவை உருகுவதில்லை. ஆவியாக மாறும் தன்மையுள்ளவை.

√ தண்ணீரையும் ஒயிலையும் கலந்துவிட முடியாது. ஆனால் சிறிது சோப்பை அதனுடன் சேர்த்தால் கலந்துவிடும்.

√ எமது தோல் பல்வேறு வகையான உணர்ச்சிகளை அடையாளம் காணவல்லது. தட்டுதல், அழுத்துதல், அதிர்வுகள், வெப்பம், குளிர், வேதனை இவற்றிலடங்கும் இவ்வாறாகும்.

# உங்களுக்குத் தெரியுமா?

- கப்பல் செலுத்தும் கலை 5000 வருடங்களுக்கு முன் சிந்து நதியில் உதயமானது.
- செஸ் (Chess) விளையாட்டு முதன்முதலில் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டது.
- உலகின் முதலாவது பல்கலைக்கழகம் இந்தியாவிலுள்ள ரக்ஷியாவில் கி.பி 700இல் நிறுவப்பட்டது.
- 1948இல் நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற இலங்கையர் டங்கன் வைற் என்பவராகும்.
- 'ஆமென்' (Amen) என்பது 'அப்படியே ஆகட்டும்' என்ற ஹீப்ரு வார்த்தையாகும். இவ்வார்த்தையை கிறிஸ்தவர்கள், யூதர்கள், முஸ்லீம்களும் பயன்படுத்துகின்றனர்.
- சூரியன், ஒவ்வொரு நிமிடத்துக்கும் 240, 000, 000 தொன்கள் தூசிகளை எரித்து விடுகிறது.
- நீங்கள் உங்கள் நாக்கில் ஏறக்குறைய 3, 000 சுவை உணர் அரும்புகளைக் கொண்டிருக்கின்றீர்கள்!




# உங்கள் கைவண்ணம்



சி.பமிஷா, தரம் 07
கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம்.



மோ.நிந்திலா, தரம் 10
யா/தேவரையாளி இந்துக்கல்லூரி.



சி.லக்ஷினி, தரம் 05
யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை.

# வெளியே வந்து பாரம்மா

எட்டிப் பார்க்கும் குஞ்சே வா!
வெளியே வந்து பாரம்மா
கூட்டி அணைக்கும் உன் அம்மா
எங்கே என்று தேடம்மா.

வட்டக் கூட்டினுள் நீயிருந்து
வளர்ந்த காலம் முடிந்ததுவோ?
முட்டை உடைந்து வெளிவந்து
முழுதாய் உணவைத் தின்னம்மா.

அம்மா உணவைத் தேடிடவே
அயலிடம் எல்லாம் போய்வருவாள்
உன்னையும் கூட்டிக் காட்டிடுவாள்
சின்னக் காலால் கிளறம்மா.

கிளறிய குப்பை அதற்குள்ளே
ஒளித்தே இருக்கும் புழுவைப்பார்
உன்னுடன் பிறந்தவர் தம்மோடு
கலந்தே உண்டு மகிழம்மா.

வளர்ந்து பெரிதாய் வந்தவுடன்
கொக் கொக் கொக்கென்றோடம்மா
கொட்டிலுக்குள்ளே கூடம்மா
கூட்டில் முட்டை போடம்மா.



கிருபா

# எப்போது நீங்கும்

ஓட்டைக்கூரையின் ஊடே
உற்றுப் பார்க்கின்றேன்
வானத்தை அல்ல வறுமையை
வானம் பொழிந்தால் என்ன
வையகம் நிறைந்து வழிந்தால் என்ன
வையகமதில் நீங்கிடுமோ இந்த
வறுமை நிலை.....!

வையகத்தில் நீருக்குப் பஞ்சம்
வானத்தில் மேகத்துக்குப் பஞ்சம்
நிலத்தில் வறுமைக்குப் பஞ்சம்
மொத்தத்தில் பஞ்சமே உலகு.

கவிஞனுக்கு சொல்லுக்குப் பஞ்சம்
கடவுளுக்கு கருணைக்குப் பஞ்சம்
அன்னையிடம் அன்புக்குப் பஞ்சம்
மொத்தத்தில் பஞ்சத்திற்கே பஞ்சம்.

க. அனுசியா
தரம் 6
கிளி/ பாரதி வித்தியாலயம்

# சிங்கத்தின் பேராசை


ஒருநாள் சிங்கமொன்று வெளிப்புறக் காட்டில் வேட்டையாடப் புறப்பட்டது.
யாரோ குறட்டைவிடும் சத்தம் அதன் காதுக்குக் கேட்டது.
அது அடுத்த பக்கமாக இருக்கும் பற்றையிலிருந்து வந்து கொண்டிருக்கிறதே!
உஸ்ஸு.... உஸ்ஸு....
ஆகா! அங்கே நித்திரையில் ஆழ்ந்திருப்பவரின் அழகைப் பாருங்கள்! மனமகிழத்தக்க குறட்டை விடுகிறார்.
உஸ்ஸு.... உஸ்ஸு....
ஹே! ஹே! இந்த முயலார் எனக்காக மதிய உணவுக்குத் தயாராக இருக்கிறாரோ!
உஸ்ஸ்
சடுதியாக அங்கே கலைமானொன்று அதன் கண்ணில் பட்டது.
ஐயோ கடவுளே!
கொஞ்சம் இரு! இச்சிறிய முயலாரை விடவும் மிகப் பெரிய உணவைத் தரும் கலைமான் அங்கிருக்கிறாரே!
அதனைப் பின் தொடர்கிறேன்




ஆனால் சிங்கம் வருவதைக் கலைமான் கண்டது.
ஓஹோ என்னைத் துரத்தி வருபவர் சிங்கராஜன்தான்.
மிக வேகமாக ஓடா விட்டால் இதிலிருந்து தப்பிவிட முடியாது.
வேகமாக ஓடிக்கொண்டிருந்த மானை அண்மிக்க சிங்கராஜனால் முடியவில்லை.
இப்படிப் பாய்ந்தால் அவனை ஒரு போதுமே என்னால் பிடிக்க முடியாது. இளைக்கிறதே!
இறுதியில்
அவன் மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறான். இதற்கு மேல் ஓடி அவனைத் துரத்த முடியாது!
திடீரென அந்த விடயம் நினைவுக்கு வந்தது.
ஹீ....ஹீ! எனக்கான உணவு அந்தப் புதருக்குப் பக்கத்தில் காத்துக்கொண்டிருக்கிறதே!
விரைவாக அந்த இடத்தை அடைய வேண்டும்!
ஆனால் அவர் அங்கு சென்றபோது,
எங்கே அந்த முயலார்? ஐயோ, அதுவும் போய் விட்டதே!
மிகப் பேராசையாக இருந்ததற்காக சரியான பாடத்தைப் படித்துவிட்டேன்.
படிப்பினை: கையில் கிடைப்பதை விட்டு திருப்தியடையாமல் பேராசைப்படுவது முறையற்றது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து
திருக்குறள்.

## நமது நோக்கு

# இந்த வருடத்திலாவது...

தமிழர் திருநாளான தைப்பொங்கல் இன்று. புதிய பானையில் - புதிதாக அறுவடைசெய்த அரிசியில் பொங்கல் படைத்து வாழ்வில் எல்லாமே புதிதாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கவேண்டும் என்று சூரியனை வழிபடும் நாள் இது.

சூரியனுக்கு நன்றி தெரிவித்துத் தமிழர்களால் கொண்டாடப்படும் முதன்மையான பண்டிகை கடந்த காலங்களில் மிகவும் குதூகலத்துடன்தான் கொண் டாடப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலை மாறிவிட் டது.

அடுத்த கணத்தில் என்ன நடக்குமோ, ஏது நிகழுமோ என்று சற்றும் அனுமானிக்கமுடியாதவாறு நிகழ்வு கள் நடந்தேறுகின்றன.

தினமும் யாழ்.குடாநாட்டில் மட்டுமன்றி - தமிழர் தாயகம் எங்கும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமற்போவோர், தாக்குதலுக்குள்ளாகிக் காயப் படுவோர் என மகிழ்ச்சியைக் கொடுக்காத செய்திகள் தான் நடந்துகொண்டிருக்கின்றன.

நான்கு வருடங்களுக்குமுன் அமுலுக்குவந்த போர் நிறுத்த உடன்பாடு இன்றும் நடைமுறையில் இருக் கிறது. ஆனால் - தமிழர் தாயகத்தில் போர்நிறுத்தம் அமுலில் இருக்கிறதா என்று கேள்வி எழவைக்கும் அள வுக்கு இராணுவ வன்முறை மோசமடைந்து செல்கிறது.

இந்த நிலையில் இன்று தைப்பொங்கல் என்றுகூட பலருக்குத் தெரியாத நிலை காணப்படுகின்றதென் றால் ஆச்சரியமில்லை.

பொங்கலுக்கு முன்னர் களைகட்டும் யாழ்.நகர வீதிகள் வெறிச்சோடிப்போய் மக்கள் நடமாட்டமின் றிக் கிடக்கின்றன. கடைகளில் வியாபாரம் இன்றி வர்த்தகர்கள் எப்போது கடையைப் பூட்டிக்கொண்டு வீட்டுக்கு ஓடித்தப்பலாம் என்று இருக்கின்றனர்.

அலுவலகங்கள், தொழில் நிறுவனங்கள் எல்லாமே ஒரு அச்சத்தின் பிடியில் சிக்கிப்போயிருக்கின்றன. இப் படி ஒரு இருள் சூழ்ந்த கட்டத்தில்தான் தமிழர் திரு நாளான தைப்பொங்கல் இன்று கொண்டாடப்படு கிறது.

அண்மைக்காலச் சம்பவங்களால் எத்தனையோ வீடுகள் அவலத்தைச் சந்தித்துள்ள இந்தத் தருணத் தில் - தமிழர் திருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியாத சூழல் காணப்படுகிறது.

இந்த வருடம் மட்டும் இந்த நிலை என்றில்லாமல், கடந்த பல தசாப்தங்களாகவே இதே நிலை தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு இருந்து வந் தது.

நிரந்தரமான - மகிழ்ச்சியுடன் இந்தத் திருநாளைக் கொண்டாடமுடியாத அவலத்துக்கு எப்போது முடிவு கிட்டும் என்ற ஏக்கமும், எண்ணமும் எல்லோர் மனதி லும் நிலைத்திருக்கிறது.

இந்த வருடத்திலாவது தமிழர் வாழ்வில் நிம்மதி யும், நீடித்த அமைதியும் நிலவவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் - தைத்திருநாளை எதிர்கொள் வோம்.

# சீரழிவுப் பாதையில்...

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியருக்கு- ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ தொலைபேசிமூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது தொடர்பாக இப்போது பரபரப்பாகப் பேசப்படுகிறது.

கடந்த வாரம் மகாராஜா நிறுவனத்தின் தலைவர் மீதும் இதே கொலை முயற்சிக் குற்றச்சாட்டு பரபரப் பாகப் பேசப்பட்டது. வடக்கு - கிழக்கில் ஊடகவியலா ளர்கள் நேரடியாகத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் அதேவேளை, தெற்கில் ஊடகச் சுதந்திரத்தை நசுக் கும் முயற்சி தீவிரம் பெற்றுவருவதையே இது காட்டு கிறது.

நேற்றுமுன்தினம் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களைக் கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் மூவினங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் பங்குபற்றியிருந் தனர்.


இந்த நிலையில் தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கி லும், தெற்கிலும் ஊடகச் சுதந்திரத்தை நசுக்க எடுக் கப்படும் முயற்சிகள், ஆரோக்கியமான அரசியல் நகர் வாகத் தெரியவில்லை.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர் ஊடகத் துறையினர் மட்டுமன்றி ஒட்டுமொத்த சமூகம் மீதும் கெடுபிடிகளும், அடாவடித்தனங்களும் அதிகரித்து வருவது கண்கூடு.

சிங்கள பௌத்த தேசியவாத நலன்களை முன் னிலைப்படுத்தும் மகிந்தவின் நடவடிக்கைகளாலும், அவரது கூட்டணிக் கட்சிகளின் இனவாதச் செயற் பாடுகளாலும் சீரழிவுப் பாதைக்கு நாடு இட்டுச்செல் லப்படுவது தெளிவாகத் தெரிகிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eczhanaadu.com

நாடும் நடப்பும்




# பண்பாட்டு மரபுகளைப் பாதுகாப்பதற்கு தமிழர்கள் ஒருங்கிணைந்து போராடுவோம்

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் திருமாவளவன்

சென்னை —

ஈழத்தமிழரின் மொழி, இனம், தேசம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கும், தமிழ்த் தேசிய உணர்வைப் பெற்று தமிழர்கள் ஒருங்கிணைந்து போராடவேண்டும் என்பதைதைத் திருநாளில் உறுதிபூணவேண்டும்.

இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உலகெங்கும் வாழ்கின்ற மக்களுக் கும், தமிழ்ப் பெருங்குடிமக்களுக் கும் இனிய பொங்கல் திருநாள் மற் றும் தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக் களை விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

'வரட்சி, அடைமழை, வெள்ளம் போன்ற இயற்கையின் கொடுமைக ளால் கடந்த ஆண்டு முழுவதும் பெரும் துன்பத்துக்குள்ளான தமிழி னம் அத்தகைய துன்பங்களிலிருந்து விடுபட்டு அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வைப் பெறவேண்டும்.

மொழி, இனம், தேசம் ஆகியவற் றைப் பாதுகாக்கவும் - தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு மரபுகளைப் பாதுகாக்கவும், தமிழ்த் தேசிய உணர் வைப் பெற்று தமிழர்கள் ஒருங்கி ணைந்து போராடவேண்டும் என்ப தையும், ஈழத்தமிழர்களின் பாதுகாப் புக்கான குரல்கொடுக்கவேண்டும் என்றும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் உணரவேண்டியது அவசியமாகும்.

மேலும் ஈழத்தமிழ் மக்கள்மீது வலிந்து திணிக்கப்படும் போர்ச் சூழலை தடுத்து நிறுத்துவதற்கு சர்வ தேச சமூகத்தை வலியுறுத்தவேண்டிய கடமையும் பொறுப்புணர்வும் தமிழர் களின் இன்றியமையாத தேவை என்பதையும் உணரவேண்டும்.

இவ்வாறான களப்பணிகளை ஆற்றுவதன்மூலம் தமிழினத்தின் ஓர்மையை நிலைநாட்டுவோம் என்று இந்தத் தைத்திருநாளில் உறுதிபூணு வோம்.

அத்துடன் சாதி, மத மற்றும் வல் லரசிய ஆதிக்கத்திலிருந்தும், சுரண் டல்களிலிருந்தும் தமிழ்ச் சமூகத்தை மீட்டெடுக்க உறுதிபூணுவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வகட்சி மாநாட்டுக்கு ஐ.தே.கவுக்கு அழைப்பில்லை!

கொழும்பு —

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் கூட்டப்படவுள்ள சர்வகட்சி மாநாட் டுக்கு இன்னமும் தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என சில அரசி யற் கட்சிகள் - அரசாங்கத்தின்மீது குற்றம் சுமத்தியுள்ளன.

இந்த மாநாட்டுக்காக அரசியற் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளதாக அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா கூறியிருந்தபோதும், இந்த மாநாடு தொடர்பாகத் தமக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப் படவில்லையென ஐக்கிய தேசியக் கட் சியின் சார்பில் அதன் பிரதிச் செய லாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித் தார்.

தமது கட்சிக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்படாதது குறித்து கட்சியின் செயற்குழுவில் கலந்துரை யாடப்படவுள்ளது. அரசாங்கத்தின் அழைப்புகள் யாவும் ஊடகங்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள் ளன எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்ும் தமக்கு இன்னமும் சர்வ கட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக் கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி யின் செயலாளர் ஹசன் அலி கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்படாதபோதும், நாம் தனிப்பட்ட ரீதியில் ஜனாதிபதி யைச் சந்தித்து சமாதானம் தொடர் பில் பேச்சு நடத்தக் கோரிக்கை விடுக் கப்பட்டபோதும் அதற்கும் பதிலில்லை.

சர்வகட்சி மாநாட்டில் தாம் பங் கேற்காத நிலையில், ஜனாதிபதியுடன் பிறிதான சந்திப்பு ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்ததை தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா தெரிவித் தார்.

## திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு!

உடுவில் —

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக இரவுநேரத் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

நேற்றுமுன்தினமிரவு சங்குவேலி- தம்மனை என்னுமிடத்திலுள்ள சக்தி வேல் என்பவரின் வீட்டு யன்னல் கம்பிகளை வளைத்து உள்ளே சென்ற திருடர்கள் தாலிக்கொடி உட்பட ஏராளமான நகைகள், பணம், புடவை களையும் திருடிச்சென்றுள்ளனர்.

இதேதினம் இரவு கந்தரோடையி லுள்ள ஒருவீட்டிலும் இதே பாணி யில் திருட்டு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது அவர்கள்மீது மயக்க மருந்து வீசி விட்டு இலகுவாக திருட்டு நடை பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்ற னர். (101)

# கட்டுநாயக்க விமான நிலைய சுற்றிவளைப்பில் 7 பேர் கைது

கொழும்பு —

கட்டுநாயக்க விமான நிலையப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கட்டு நாயக்க பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி பிரியந்த ஏக்கநாயக்க தெரி வித்தார்.

இந்த ஏழுபேரில் தமிழ்ப்பெண் ஒருவரும், சிங்களவர் நால்வரும் மற் றும் இரு முஸ்லிம் இளைஞர்களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரி வித்தனர்.

சுமார் 30 விமானப்படையினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று அதிகாலை 4 மணிமுதல் காலை 8 மணி வரை இந்தச் சுற்றிவளைப்புத் தேடு தலை மேற்கொண்டனர்.

சுமார் 100 வீடுகளில் மேற்கொள் ளப்பட்ட இந்தத் தேடுதலின்போது இராணுவச் சீருடைகளும் கைப்பற் றப்பட்டன. இதேவேளை, குளியாப் பிட்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கை யில் 51 பேர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் வாழ்வில் இது அறுவடைக் காலம்!

தை முதல்நாள் தமிழர்களின் திருநாள். உழவர்களின் பெருநாள். தமிழர்கள் இயற்கைக்கு விழா எடுக்கும் இனிய நாள். அல்லவை கழிந்து நல்லவை மலரும் இன்ப நாள்.

களனி திருத்தி, வயல் உழுது, எரு இட்டு, வரப்புக் கட்டி, நீர் பாய்ச்சி, நெல் விதைத்து, களை எடுத்து, விளைந்த நெல்மணிகளின் பாரம் தாங்க முடியாமல் தலை சாய்ந்து படுத்த கதிர்களை நல்ல நாள் பார்த்து, ஒரு கைப்பிடி அரிந்து, தாம்பாளத்தில் வைத்து வீட்டுக்கு எடுத்து வந்து, வீட்டு வாசலில்கட்டித் தொங்க விடுவார்கள். இதற்குப் புதிர் எடுத்தல் என்று பெயர்.

அதில் கொஞ்ச நெல்மணிகளையெடுத்து, குத்தி அரிசியாக்கி, அந்தப் புத்தரிசியை பழைய அரிசியோடு கலந்து மஞ்சளும், இஞ்சியும் கட்டிய புதுப்பானையில் பாலும், சர்க்கரையும், பாகும், பருப்பும் இட்டுப் பொங்கி இயற்கைத் தெய்வமான ஞாயிறுக்குப் படைத்து வீட்டுத் தலைவனும், தலைவியும், பிள்ளைகளும் கொண்டாடி மகிழும் விழாவே பொங்கல் நாள்! இது தமிழர்களுக்கே உரித்தான திருநாள்.

பொங்கல் விழாவுக்குச் சில வாரங்கள் கழித்தே அரிவு வெட்டு இடம்பெறும். வெட்டிய கதிர்களைக் குவித்து வயலின் நடுவே சூடு வைப்பார்கள். அதன் பின்னரே மாடுகளைக் கொண்டு சூடு மிதிப்பு இடம்பெறும்.

தைப்பூசத் திருநாளில் புதிர் குழைத்தல் இடம்பெறும். புத்தரிசி பொங்கி சர்க்கரையும், வாழைப்பழமும் சேர்த்துப் படைக்கும் இப்புதிர் சோறை சுற்றமும், நட்பும், அயலும் சூழ இருந்து உண்டு மகிழ்வர். அண்மைக்காலமாக இந்த வழக்கம் அருகிவருகிறது.

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். உழவர்கள் தமது கமச் செய்கைக்குத் துணையாக இருந்த கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே மாட்டுப் பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழா பட்டிப் பொங்கல் என்றும் அழைக்கப்படும்.

காலையில் வயல் உழவும், வண்டி இழுக்கவும், சூடு மிதிக்கவும், பால், தயிர், நெய்கொடுக்கவும், வயலுக்கு எருதரவும் காரணமாக இருந்த எருதுகளையும், பசுக்களையும், கன்றுகளையும் குளங்களில் குளிப்பாட்டி, குடிக்கப் பச்சையரிசிக் கஞ்சி கொடுப்பர்.

மாலையில் பட்டிப் பொங்கல் பொங்கிப் படைக்கப்படும். மாடுகளுக்கு அந்தப் பொங்கலில் ஒரு கவளம் உண்பதற்குக் கொடுக்கப்படும். பின்னர் மாடுகளின் கொம்புக்கும், நெற்றிக்கும் குங்குமம், சந்தனம் பூசி கழுத்தில் மலர் மாலை, வடை மாலை போன்றவற்றால் அலங்கரித்து வீதிகளில் ஊர்வலம் விடுவார்கள்.

தைப்பொங்கல் திருநாளுக்கு வானியல் அடிப்படையும் இருக்கிறது. தென்திசை நோக்கிப் பயணம் செய்யும் ஞாயிறு (பூமியில் இருந்து வானத்தை அண்ணாந்து பார்க்கும்போது) இந்நாளில் வடதிசை நோக்கி பன்னிரண்டு இராசிகளில் ஒன்பதாவது தனுசு இராசியில் இருந்து மகர இராசியில் புகுகின்றான். ஒரு இராசியில் இருந்து இன்னொரு இராசிக்குப் போக எடுக்கும் காலம் ஒரு மாதமாகும்.

இப்போது வழக்கில் இருக்கும் 'பிரபவ' முதல் 'அட்சய' வரை 60 ஆண்டுப் பெயர்கள் சாலிவாகனன் என்ற அரசனால் கி.பி78 இல் அறிமுகப்படுத்தப்பட்டவை ஆகும். இவை வடபுல அரசனால் ஏற்பட்டதால் வடமொழிப் பெயர்கள் வழங்கப்படலாயிற்று.

இந்த ஆண்டு முறையால் தமிழர் மொழி, மரபு, மானம், பண்பாடு, வாழ்வு முதலியவற்றிற்கு விளைந்த அழிவையும், இழிவையும் எண்ணிப் பார்த்த தமிழ் அறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் - 1921 ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையில் கூடி மாற்று நடைமுறைகள் பற்றி ஆராய்ந்தார்கள்.

திருவள்ளுவர் - கிறிஸ்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்று தீர்மானித்து, அவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றைப் பின்பற்றுவதெனவும் அதுவேதமிழ் ஆண்டாகக்கொள்வதெனவும் செய்யப்பட்டது.

எனவே, திருவள்ளுவர் ஆண்டு தொடக்கம் தைப்பொங்கல் திருநாளான தை முதல் நாள் தொடங்கி மார்கழிக் கடைசியில் முடிவுறும்.

தமிழ்நாட்டையும், இலங்கையையும் பொறுத்தவளவில் ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் பருவ மழை (கார்) காலமாகும். பண்டைய காலத்தில் ஆவணி, புரட்டாதி மாதங்கள் கார்காலமாகவும், ஐப்பசி, கார்த்திகை கூதிர் (குளிர்) காலமாகவும் கணிக்கப்பட்டது.

இப்போது ஆவணி, புரட்டாதி மாதங்களில் நல்லநாள் பார்த்து விதைப்பு இடம்பெறுகிறது. சில சமயம் முதல் மழை பெய்த பின்னர் விதைக்கிறார்கள். மழை பெய்யுமுன் ஆவணியில் விதைப்பு விதைப்பதும் உண்டு. இதற்கு புழுதி விதைப்பு என்று பெயர்.

புரட்டாதியில் சிறுகப் பெய்யத் தொடங்கி ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பருவமழை பலமாகப் பெய்து வயல்களில் தண்ணீர் நிறைகிறது. தண்ணீரின் மட்டம் கூடக் கூட பயிரும் ஓங்கி வளரும். வானம் பார்த்த வயலாக இருந்தால் சில சமயம் பயிர் சிறிதாக இருக்கும் போது. பெருமழை பெய்து வெள்ளத்தினால் பயிர் அழுகிப்போவதும் உண்டு. அல்லது போதிய மழை இன்மையால் கருகிப் போவதும் உண்டு.

தை, மாசி மாதங்களில் வயல்களில் தண்ணீர் வற்றி, கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும். வயல்களை உழுது விதைத்துக் களை பிடுங்கி, கட்டிக் காத்து உழைத்துப் பாடுபட்டதன் பயனை உழவர்கள் அறுவடை செய்யும் காலம் இதுவாகும்.

இதன் காரணத்தினாலேயே தை மாதப் பிறப்பை உழவர்கள் ஆவலோடு எதிர்பாக்கிறார்கள். தை பிறந்தால் தங்கள் துன்பங்கள் தீரும், வழி பிறக்கும் என நினைக்கிறார்கள்.



தமிழர் திருநாளாம் பொங்கல் விழா என்பது வெறும் சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல் உண்ணும் நாளாக இருந்துவிடக் கூடாது. அது எங்கள் உணர்வுகளைப் புதுப்பிக்கும் நாளாகவும், கலை பண்பாடு பாரம்பரியம் போன்ற வற்றைப் போற்றிப் பாதுகாக்க சூளுரைக்கும் நாளாகவும் இருக்க வேண்டும்.

புத்தாண்டில் உலகம் வாழ் தமிழ் மக்கள் வாழ்வில் அல்லல்கள் நீங்கி அமைதி மலர வேண்டும். தொல்லைகள் ஒழிந்து மகிழ்ச்சி பொங்க வேண்டும். துன்பங்கள் தொலைந்து கோடி இன்பங்கள் குவியவேண்டும். இருள் அகன்று ஒளி வீச வேண்டும். கல்வி துலங்க வேண்டும். தொழில் வளம் பெருக வேண்டும். அறிவியல் வளரவேண்டும். தமிழ் உணர்வு ஓங்கவேண்டும். இனவுணர்வு பூக்கவேண்டும். தமிழ் மண்ணில் நிலையான அமைதி நிலவ வேண்டும். தமிழ் மக்கள் வாழ்வில் தென்றல் வீசி, புதுவாழ்வு பூக்க வேண்டும். அந்த நம்பிக்கையுடன் தமிழர் திருநாளைக் கொண்டாடி புதிய ஆண்டில் காலடி எடுத்து வைப்போம்.

நக்கீரன் -

# திருமறைக் கலாமன்ற வரலாற்றில் 'கலைக்கோட்டம்' புதியதோர் அத்தியாயம்

''திருமறைக் கலாமன்றம்'' இறை பணியாற்றப் புறப்பட்ட மதகுருவால் கலைப் பணியாற்ற



வெனஸ்தாபிக்கப்பட்டது. இயல்பாகவே தன்னிடமிருந்த கலை ஆர்வம் மேலீட்டால், தான் பங்குக் குருவாக இந்த உரும்பிராய்ப் பகுதியில் குறிப்பிட்ட சில இளைஞர்களை ஒன்றிணைத்துத் திருமறைக்கலா மன்றத்தைத் தோற்றுவித்தார் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகள்.

கடந்த 40 வருடங்களாகக் கலைப் பணியாற்றிவரும் திருமறைக்கலாமன்றம் இலங்கையின் பல பாகங்களிலும் 20 இற்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டுள்ளதுடன், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் அமைப்பு ரீதியான கனதியான கலைச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இன்று நான்காவது தலைமுறையிடம் கையளிக்கப்பட்டுள்ள திருமறைக்கலா மன்றத்தின் நடந்த கால கலைப் பாரம்பரியத்துக்குக் கட்டியம் கூறுவதாகப் புதிய மெருகுடன் 'கலைக் கோட்டம்' நிர்மாணிக்கப்பட்டு, இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு காலத்தின் பதிவு மட்டுமன்றி, கலை வடிவங்கள், கலைஞர்களின் இதயக் கோயிலாக மிளிரும் என்பது மறுக்க முடியாத உண்மையே. யாழ்ப்பாணம் டேவிற் வீதியில் புதிய பாணியில் சிற்ப, சித்திர வேலைப்பாடுகளுடன் மிகப் பிரமாண்டமான முறையில் மூன்று மாடிக் கட்டடமாகக் கலைக் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கவின் கலைப் பயிலகத்தின் கலைப் பயன்பாடுகளின் மேலோங்கிய செழிப்பே 'கலைத்தூது அழகியற் கல்லூரியாக' கலைக் கோட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளமை, 40 ஆண்டு கால திருமறைக்கலாமன்ற வரலாற்றின் வீரியத்தை வெளிக்காட்டி நிற்கிறது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கலைக் கோட்டம், கலைத்தூது அழகியல் கல்லூரி திறந்துவைக்கப்படுகின்றமை தொடர்பாகத் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் ஜோ.ஜோண்சன் ராஜ்குமார், கருத்துகூறுகையில்-

கலைக்கோட்டம் பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. திருமறைக்கலாமன்றம் 1980 ஆம் ஆண்டுகளின் இறுதியில் இருந்து ஆரம்பித்து நடாத்தி வந்த கவின் கலைகள் பயிலகம், 40 ஆவது ஆண்டில் இருந்து கலைத்தூது அழகியல் கல்லூரியாக மலர இருக்கிறது. கலைத்தூது அழகியல் கல்லூரி இந்தக் கலைக்கோட்டத்தில் இயங்கவிருக்கின்றதென்பது முக்கியமான விடயம். அழகியல் கல்லூரியின் வளர்ச்சிக்காகத்தான் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கல்லூரியின் வளர்ச்சியும், நிதிசார்ந்த வகையில் எதிர்கால நோக்கையும் கருதி ஒரு சில வருமானத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவை வருமான நோக்கில் அமைக்கப்பட்டது. முக்கியமாக இன்று பெருமளவுக்கு மக்கள் தொழில் நுட்பமும், அது சார்ந்த கலைகளோடு ஈடுபட்டிக்கையில் அழகியல்கலைக் கல்விகள் பெருமளவில் வீழ்ச்சியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இப்படியான ஒரு சூழலில்தான் கவின் கலைகள் பயிலகமும் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது அழகியல் பாடங்கள் பல்கலைக்கழகங்கள் மட்டத்தில் இருந்தாலும், பரவலாக்கப்படவில்லை. பாடசாலைகளிலும் ஏனோ தானோ என்று பயில்கின்ற தன்மையே இருக்கிறது.

பல்கலைக்கழக வாய்ப்புக்கள் கிடைக்காது போனால் அம்மாணவர்களுக்கான சந்தர்ப்பங்களும், தங்களை வளர்த்துக் கொள்வதற்கான தேவைகளும் இல்லாமல் இருக்கின்றது. இவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த அழகியல் கல்லூரி உருவாக்கம் பெற்றுள்ளது. படிப்படியாக இதனை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

இதனூடாக பல இளம் கலைஞர்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையுண்டு. கலைஞர்களைப் பாதுகாத்து, அவர்களின் ஊடாக கலைவடிவங்களை வளர்த்தெடுக்கக் கூடியதாக இருக்கும் என்பது எமது கடந்த கால அனுபவமாகவுள்ளது எனக் குறிப்பிட்டார் பிரதி இயக்குநர்.

கலை வழியே இறைபணியாற்றி வரும் திருமறைக்கலா மன்றம் கலைக்கோட்டத்தின் புத்துருவாக்கத்துடன், பல்பரிமாண நுண்கலைச் சமூகம் உதயமாவதைக் கலைக் கோட்டத்தின் வடிவமைப்பில் இருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

கலைவடிவங்கள் நிறுவனமயமாக்கப்பட்டு, தொழில் நிலைக் கல்வியாக மாற்றப்பட்டுள்ள இன்றைய காலப்பகுதியில் 'கலைக்காக கல்வி கற்ற நிலையில் இருந்து கல்விக்காகக் கலையைக் கற்க வேண்டிய வேறுபட்ட கலைச் சமூகத்தை' காணமுடிகிறது.

தூய்மையான கலையை மேன்மையாக, பக்தி பூர்வமாகப் பயில்வதற்கு அமைதியான சூழலில் கலைத்தூது அழகியல் கல்லூரி தோற்றம் பெற்றுள்ளமை, சக்தி மிக்க கலை பாரம்பரியத்தின் திறவுகோலாகவுள்ளது. நேர்த்தியான கலைஞர்களை உருவாக்குவதன் மூலமாகக் கலை வடிவங்களைப் பேணிப் பாதுகாப்பதுடன், வளர்த்தெடுக்கவும் முடியும்.



கடந்த 40 வருடகால செயற்பாடுகளில் இருந்து அவதானிக்கும் போது இவை திருமறைக் கலாமன்றத்தாலேயே செயற்படுத்த முடியுமென்பது யதார்த்தமாகும். புதிய ஆண்டில் திருமறைக் கலாமன்றம் கலைக் கோட்டத்தின் ஊடாகவும், கலைவழியே இறைபணி யாற்ற முன்வந்துள்ளது.

இ.விஜேந்திரன்.

# ஈழத் தமிழர் மீதான போரை நிறுத்த சர்வதேச சமூகம் தலையிட வேண்டும்

## விடுதலைச் சிறுத்தைகள் மத்திய குழு வலியுறுத்தல்

சென்னை —

ஈழத்தமிழ் மக்கள் மீது அரசு திணித்து வரும் போர்ச் சூழலை நிறுத்துவதற்க்கு சமாதானத்தில் நம்பிக்கை கொண்டுள்ள சர்வதேச சமூகம் உடனடியாகதலையிட வேண்டும் என விடு தலைச் சிறுத்தைகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கடந்த புதன்கிழமை சென்னை ஜி.என்.செட்டி வீதியில் உள்ள விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் தலைமையில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகளின் மத்திய பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

அண்மையில் தமிழகத்தில் நேர்ந்த அடைமழை மற்றும் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கியும் சென்னை வியாசர்பாடி மற்றும் எம்.ஜி.ஆர் நகர் ஆகிய இடங்களில் வெள்ள நிவாரணம் பெறுவதில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கியும் உயிர்ப் பலியான பொதுமக்களுக்கு மதுரை உசிலம்பட்டி பகுதியைச் சேர்ந்த மாதரை முருகன், ஆண்டாள் கொட்டாரம்ராசா உள்ளிட்ட, சாதி வெறிக் கொடுமைகளுக்குப் பலியான தோழர்களுக்கும், ஈழத்தில் மாணவி தர்சினி, திருகோணமலை பல்கலை மாணவர்கள், தமிழீழ நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் உள்ளிட்ட சிங்கள இனவெறிக் கொடுமைகளுக்குப் பலியான ஈழத்தமிழர்களுக்கு இம் மையக்குழு வீரவணக்கம் செலுத்துகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கும்மேலாக ஈழத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி அப்பாவித்தமிழர்களை படுகொலை செய்வதும் தமிழ்ப் பெண்களைப் பாலியல் வல்லுறவு கொண்டு படுகொலைசெய்வதும் பேன்ற இன வெறியாட்டத்தில சிங்களப்பேரினவாத அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், புதிதாக ஆட்சிப்பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற சிங்கள இனவெறிக்கும்பலுடன் கை கோர்த்து கொண்டு ஈழத்தில் மீண்டும் போரைத் திணிக்கும் சூழலை உருவாக்கி வருகிறார்.

ஆகவே ஈழத்தில் சிங்கள ஆட்சியாளர்களால் திணிக்கப்படும் போர்ச்சூழலை தடுத்து நிறுத்த உலக அமைதியில் நம்பிக்கை கொண்டுள்ள சர்வதேச சமூகம் உடனடியாக தலையிட வேண்டுமென்ற விடுதலைச் சிறுத்தைகள் வற்புறுத்துகிறது. வரும் பெப்ரவரி 14 ஆம் திகதி சென்னையில் ஈழத்தில் போர்வேண்டாம் சர்வதேசமே தடுத்து நிறுத்து என்னும் கோரிக்கையை வலியுறுத்தி மாநாடு நடத்திட இம் மையக்குழு தீர்மானிக்கிறது.

கிறித்தவர் மற்றும் இஸ்லாமியப் பெருங்குடி மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் அவர்களுக்கு சமூக நீதியை வென்றெடுக்கும் வகையிலும் இவ்விரு சிறுபான்மைச்சமூகத்தவருக்கும் கல்வி வேலை வாய்ப்பு மற்றும் அரசியல் தளங்களில் அவரவர் தம் மக்கள் தொகைக்கேற்ப தனி இட ஒதுக்கீடு வழங்கவேண்டுமென இம் மையக்குழு இந்தியப் பேரரசை வலியுறுத்தியுள்ளது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைசேர்ந்த உழைக்கும் பெண்களுக்கான கருத்துரிமை, சொத்துரிமை, அரசியல் உரிமை, கல்வி மற்றும், பண்பாட்டு உரிமை போன்ற அனைத்து பெண்ணுரிமைகளையும் மீட்டெடுக்க வேண்டிய விழிப்புணர்வை வளர்த்தெடுக்கவும், அவற்றை வென்றெடுப்பதற்கான களப்பணிகளை ஆற்றவும் அனைத்து ஜனநாயக சக்திகளும் முன்வர வேண்டுமென தமிழ்ச் சமூகத்திற்கும் அறைகூவல் விடுக்கிறது.

கடந்த 10.10.2005 அன்று மாமல்ல புரத்தில் நடைபெற்ற பஞ்சமி நிலமீட்பு மாநாட்டின் போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி தமிழகத்திலும் புதுவையிலும் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட மண்ணுரிமை மாநாடுகளை தமிழகத்தில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலைகளைக் கணக்கில் கொண்டு ஜுலைத் திங்களில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.




## பாப்பரசரைச் சுட்டவரின் சோதனை முடியவில்லை

கெய்ரோ —

மறைந்த பாப்பரசர் ஜோன்போலை 1981ஆம் ஆண்டு சுட்டுக்கொல்ல முயன்ற மெக்மூத் அலி அக்சா இத்தாலி நாட்டுச்சிறையில் 19 ஆண்டு காலம் தண்டனை அனுபவித்த பின்னர் 2000 ஆம் ஆண்டு பாப்பரசர் அவருக்கு மன்னிப்பு வழங்கினார்.

அதன் பிறகு அவர் தாய் நாடான துருக்கிக்குத் திருப்பியனுப்பப்பட்டார். 1979 ஆம் ஆண்டு கொலையொன்றுக்காக அவர் கைது செய்யப்பட்டார். இந்தக் கொலைக்காக அவருக்கு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை முடிந்து விடுதலை ஆனார்.

சிறையில் இருந்து வெளியே வந்ததும் அவர் மீண்டும் கை விலங்கிடப்பட்டு, இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் மையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். இராணுவத்தில் வேலை பார்த்த அவர் அங்கிருந்து ஓடிவந்து விட்டதால் அவரை இராணுவம் அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றது.

## போகி தமிழர் திருநாள் அல்ல தமிழக சபாநாயகர் தெரிவிப்பு

சென்னை —



போகி தமிழர் திருநாளே அல்ல என தமிழ்நாடு சபாநாயகர் காளிமுத்து கூறினார்.

இது தொடர்பாக தமிழக சட்ட சபை சபாநாயகர் காளிமுத்து நிருபர்களிடம் கூறியதாவது -

போகி பண்டிகை அன்று சட்டசபை கூடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கம்யூனிஸ்ட்டுக்கள் சபையை புறக்கணிக்கவில்லை. அவர்கள் வேறு காரணத்தைக் கூறியுள்ளனர். தி.மு.கதான் இந்தக் காரணத்தை கூறியுள்ளது. போகி தமிழர் திருநாளேயல்ல விடுமுறை தினமுமல்ல அரச அலுவல் நாள்தான்.

போகி என்பது இந்திரனின் பெயர். வைதீக அடிப்படையில் அதை பண்டி கையாக கொண்டாடுகின்றனர். போகி, பண்டிகை ஆகிய இரண்டுமே தமிழ்ச் சொற்களல்ல. தமிழாய்ந்த பேராசிரியர் அன்பழகன் இதை காரணமாக எப்படிச் சொல்கிறார் என்று தெரியவில்லை.

எனினும் சபையை புறக்கணிக்காமல் அனைவரும் வாருங்கள் என அழைப்பு விடுத்துள்ளேன். ஆளுனர் உரை முடிந்தவுடன் சட்டசபையில் அலுவல்கள் ஆய்வுக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ள எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு முறையாக அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எங்களது கடடைமையை செய்து விட்டோம். அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும் அலுவல் ஆய்வுக் குழுக்கூட்டம் நிச்சயமாக நடக்கும். இந்தக்கூட்டத் தொடர் எத்தனை நாட்கள் நடைபெறு மென்பது அலுவல் ஆய்வுக் குழுக்கூட்டத்தில் முடிவுசெய்யப்படும்.

பா.ம.க, எம்.எல் ஏ.கிருஷ்ணன் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார். சொந்த விருப்பத்தின பேரில் ராஜினாமா செய்வதாக அதில் குறிப்பிடப்பட வேண்டும். அவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்த போதிலும் அவரிடம் விசாரித்தேன்.

யாருடைய வற்புறுத்தலின் பேரிலும் ராஜினமா செய்யவில்லை என்றார். எனவே சபை விதிகளின் படிஅவரது பதிலில் திருப்தி அடைந்ததால் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டேன். இவ்வாறு காளிமுத்து கூறினார்.

## தனது மகளுடன் தங்கியிருப்பதற்கு பிணை வழங்குமாறு நளினி மனு

வேலூர் —

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற நளினி தன் மகளைக் காண ஒருமாத பிணையில் செல்ல சிறை அதிகாரிகளிடம் மனு செய்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜுவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய குற்றவாளிகளான முருகன், அவரது மனைவி நளினி, சாந்தன், பேரறிவாளன் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. இதில் முருகன், அவரது மனைவி நளினி, சாந்தன், பேரறிவாளன் ஆகிய நான்கு பேருக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

நளினிக்கு மட்டும் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. நளினி வேலூர் பெண்கள் சிறையிலும், முருகன் உட்பட மூவர் ஆண்கள் சிறையிலும் உள்ளனர். கடந்த ஆண்டு ஜுன் மாதத்துடன் நளினியின் தண்டனைக் காலம் 14 ஆண்டுகள் முடிந்தது. இவரை விடுதலை செய்யப் பரிந்துரை செய்து வேலூர் பெண்கள் சிறை அதிகாரிகள் சென்னையிலுள்ள சிறைத்துறை அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அங்கிருந்து இதுவரை பதில் வரவில்லை. இதனால் நளினி கடந்த ஆறு மாதத்துக்கு மேலாக சிறையில் இருந்து வருகிறார். இந்த நிலையில் இலங்கையில் வசித்துவந்த நளினியின் மகள் அரித்திரா கடந்த செவ்வாய்க்கிழமை வேலூர் சிறையில் தனது பெற்றோரை சந்தித்து விட்டுச் சென்றார்.

இதையடுத்து தன் மகளைப் பார்க்கவும், அவருடன் சில நாட்கள் தங்கியிருக்கவும், தன்னை ஒரு மாதம் பிணையில் விட வேண்டும் என்று நளினி வேலூர் பெண்கள் சிறை அதிகாரிகளிடம் மனு செய்துள்ளார். இந்த மனு உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், மனுவின் மீதான விசாரணை விரைவில் நடக்கவுள்ளதாக சிறை அதிகாரிகள் கூறினர்.

மூன்று மாத சுற்றுலா விசாவில் தமிழகம் வந்துள்ள அரித்திரா அதுவரையில் சென்னையில் தங்கியிருப்பார்.

தமிழகம் வந்துள்ள அரித்திராவுக்குக் கடுமையான நிபந்தனைகளுக்கிடையில் விசா வழங்கப்பட்டுள்ளது. பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டியளிக்கக் கூடாது என்றும், தமிழகத்தில் தங்கும் இடம் குறித்த தகவல்களை வெளியில் விடக்கூடாது என்றும், அரித்திரா செல்லும் இடங்கள் குறித்துப் புலனாய்வுத்துறை பொலிஸாருக்கு முன்னரே தெரிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல நிபந்தனைகளின் பேரில் அரித்திராவுக்கு விசா வழங்கப்பட்டுள்ளது.

## தி.மு.க கூட்டணிகளிடையே தொகுதி உடன்பாட்டில் சிக்கல்

சென்னை —

தி.மு.க கூட்டணியில் 7 கட்சிகளுள்ளன. இந்தக்கட்சிகளிடையே தொகுதிப் பங்கீடு குறித்து பூர்வாங்க பேச்சு நடப்பதாக கருணாநிதி கூறியுள்ளார்.

மொத்தமுள்ள 234 தொகுதிகளில் ஆட்சியமைக்க 117இடங்கள் வேண்டும். எனவே தி.மு.க. குறைந்தது 140 தொகுதிகளில் போட்டியிட விரும்புகிறது. இதைவிட மிகுதி 94இடங்கள் உள்ளன.

இவற்றை கூட்டணிக் கட்சிகளுக்கு பிரித்துக் கொடுப்பது சிரமமான விடயம் என கூறப்படுகிறது.

காங்கிரஸ் 60 தொகுதிகள் கேட்கும் என்று அக்கட்சி நிர்வாகியொருவர் தெரிவித்தார். கடந்த 2001ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் காங்கிரசும், த.மா.கா.வும் அ.தி.மு.க. கூட்டணியில் இருந்தன. 47 தொகுதிகள் இக்கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டது. அவை வருமாறு -

பூங்கா நகர், புரசைவாக்கம், ஆயிரம் விளக்கு, சேப்காக்கம், திருவல்லிக்கேணி, வில்லிவாக்கம், தாம்பரம், திருப்பெரும்புதூர், திருவள்ளூர், வேலூர், செங்கம், தண்டாரம்பட்டு, கடலூர், காட்டுமன்னார் கோவில், மங்களூர் ரிஷிவந்தியம், ஓசூர், நாமக்கல், கோவைகிழக்கு, கோவைமேற்கு, தொண்டாமுத்தூர், வால்பாறை, குன்னூர், ஊட்டி, திருச்சி,-1, திருச்சி-2, கரூர், தஞ்சாவூர், பாபநாசம், பட்டுக்கோட்டை, பேராவூரணி, நன்னிலம், அறந்தாங்கி, மதுரை மத்தி, கம்பம், சாத்தூர், விருதுநகர், சிவகாசி, காரைக்குடி, மானாமதுரை, திருவாடானை, பரமக்குடி, கடலாடி, வாசுதேவநல்லூர், சாத்தான்குளம், நாகர்கோவில் மற்றும் கிள்ளியூர்.

இவை தவிர மேலும் 13 தொகுதிகளை காங்கிரஸ் கூடுதலாகக் கேட்கிறது.

பா.ம.க 50 தொகுதிகள் கேட்கும் எனத் தெரிகிறது. கடந்தமுறை அ.தி.மு.க கூட்டணியில் இக்கட்சி போட்டியிட் டது.

அண்ணாநகர், சைதாப்பேட்டை, செங்கல்ப்பட்டு, அச்சிரப்பாக்கம், பூந்தமல்லி, திருத்தணி, காட்பாடி, நாட்ராம்பள்ளி, திருப்பத்துார், திருவண்ணாமலை, செய்யாறு, வந்தவாசி, விழுப்புரம், பண்ருட்டி, சிதம்பரம், விருத்தாசலம், சங்கராபுரம், தர்மபுரி, பெண்ணாகரம், சேலம்-2 கபிலர்மலை, நடப்பாடி, தாராபுரம், அந்தியூர், தண்டிமடம், ராதாபுரம், ஆகிய 27 தொகுதிகள் பா.ம.க.வுக்கு ஒதுக்கப்பட்டது.

தற்போது அதைவிடக் கூடுதல் தொகுதிகளை தி.மு.கவிடம் கேட்கி றது.

ம.தி.மு.க கடந்த முறை 211 தொகுதிகளில் தனித்து நின்றது. தி.மு.க விடம் 21 தொகுதிகளைக் கேட்டு அக்கட்சி 17தொகுதிகள் ஒதுக்கியதை ஏற்காமல் ம.தி.மு.க தனித்து நின்றது.

தி.மு.க.விடம் 40தொகுதிகளைக் கேட்குமெனத் தெரிகிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கடந்த முறை பெரம்பூர், சிங்கா நல்லூர், மதுரை-கிழக்கு, திண்டுக்கல், திருவெறும்பூர், திருவாரூர், திருவெட்டாறு, விளவங்காடு, ஆகிய 8 தொகுதிகளில் நின்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் 8 தொகுதிகளில் போட்டியிட்டது.

இவ்விரு கட்சிகளும் தலா 10 தொகுதிகள் கேட்குமென கூறப்படுகிறது.

## அரசாங்க அலுவலகங்கள் மீது நேபாளத்தில் தாக்குதல்கள்

காத்மண்ட் —

நேபாளத்தில் மன்னர் ஆட்சியை ஒழிக்கக் கோரி மாவோ கிளர்ச்சி யாளர்கள் ஆயுதம் ஏந்தி போராடி வருகின்றனர். ராணுவத்துக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் பல ஆண்டுகளுக்கு மேலாக நடந்துவரும் இந்தச் சண்டையில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர்.

இந்த நிலையில் இந்தியா உட்பட பல நாடுகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கிளர்ச்சியாளர்கள் கடந்த 3 மாதமாக போர் நிறுத்தத்தை அறிவித்தனர். ஆனால் இந்தப் போர் நிறுத்தத்தை கடந்த சில நாட்களுக்கு முன்பு கிளர்ச்சியாளர்கள் வாபஸ் பெற்றனர். இதனால் எந்த நேரத்திலும் மீண்டும் போர் மூளும் என்ற சூழ்நிலை உருவானது.

போர் நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக் கொண்ட கிளர்ச்சியாளர்கள் மீண்டும் பாரிய அளவில் தாக்குதலை தொடங்கினர்.

ஒரே நேரத்தில் 1000 இற்கு மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் பல்வேறு மாவட்டங்களிலுள்ள அரச அலுவலகங்களைச் சுற்றி வளைத்தனர். நவீன ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகளுடன் அரச அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். இதில் 6 அரச அலுவலகங்கள் தகர்க்கப்பட்டன.

மேற்குப் பகுதியில் ஒரு இராணுவ முகாமும் தகர்க்கப்பட்டது. இந்தத் தாக்குதலை அரச படை சற்றும் எதிர்பார்க்கவில்லை. கைலாலி மாவட்டம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் விடிய விடிய துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இந்தச் சண்டையில் எத்தனை பேர் பலியானார்கள் என்பது அறிவிக்கப்படவில்லை. ஆனால் 10 ராணுவத்தினரைக் காணவில்லை. அவர்களை கிளர்ச்சியாளர்கள் கடத்திச் சென்றிருக்கலாமென்று தெரிகிறது.

தலைநகர் காட்மாண்டுவில் அரச தலைமை அலுவலகத்தையும் தீவிரவாதிகள் தாக்க முயற்சி செய்தனர். ஆனால் அந்தத் தாக்குதல் திட்டம் முறியடிக்கப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இராணுவ வாகனத் தொடரணி கிளைமோர் வெடிக்காததால் தப்பியது

## திருமலையில் சம்பவம்

திருகோணமலை —

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் நிலையத்துக்கு சமீபமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் வெடிக்காததால் அந்த வீதியால் சென்ற இராணுவத்தினரின் வாகனம் மயிரிழையில் தப்பியது.

நேற்று 11.15 மணியளவில் விடுமுறையை முடித்துக்கொண்டு கடமைக்குத் திரும்பிய இராணுவத்தினரின் வாகனத் தொடரணி மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது கிளைமோர் சிறிய வெடிச்சத்தத்துடன் புகைகளை வெளியேற்றியது. இதனால் குறித்த நேரம் அந்த இடத்தில் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் எவ்வித சேதங்களுமின்றி தப்பித்துக்கொண்டது.

இதனையடுத்து அந்த வீதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தொடர்ந்து வந்த வாகனத்தொடரணியினரை நிறுத்தியதுடன் அந்தப்பகுதி இராணுவ அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினர்.

இதன்பின்னர் அங்கு வந்திருந்த உயர் அதிகாரிகளும், உடனடியாக வெடிபொருட்களை அகற்றும் பிரிவினரும் அங்கு மறைத்து வைக்கப்பட்ட கிளைமோர் குண்டு ஒன்றை மீட்டனர். தொடர்ந்து தேடுதல் நடத்தியபோது மேலும் இரண்டு கிளைமோர் கண்ணிவெடிகள் மீட்கப்பட்டன.

இதன் பின்னர் எஞ்சிய நான்கு இராணுவ வாகனங்களும் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டன.

இதனையடுத்து அந்த வீதியூடான போக்குவரத்து சில மணிநேரங்கள் நிறுத்தப்பட்டதுடன் பொதுமக்கள் கடுமையாக சோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

## போர்நிறுத்தம்...

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 100 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் அரைப் பங்கினர் சாதாரண பொதுமக்கள். இந்த நிலை தொடர்ந்தால் நாடு விரைவில் போரை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

படையினர் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகம் குற்றஞ்சாட்டி வருகிறது. ஆனால், இந்தச் சம்பவத்துடன் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லையென விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் மறுத்து வருகின்றனர். படையினர் மீது நடத்தப்படும் தாக்குதல்களின் பின்னணியில் பொதுமக்களே உள்ளதாக விடுதலைப் புலிகள் கூறிவருவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எவ்வாறாயினும், இந்த நிலைமைகளால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருவதுடன், அதிகரித்துள்ள பாதுகாப்புக் கெடுபிடிகளால் படையினரால் பொதுமக்கள் துன்புறுத்தப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதல்களால் தமிழ்மக்கள் மீதான துன்புறுத்தல்களே அதிகரித்துள்ளன. இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு, இலங்கை அரசாங்கமும், படையினரும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கண்காணிப்புக்குழு அவசர வேண்டுகோள் விடுக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் மாற்று ஆயுதக் குழுக்கள் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதுடன், கிழக்கு மாகாணத்தில் - அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இந்தக் குழுக்கள் சுதந்திரமாகச் செயற்பட்டு வருகின்றன. இந்த மாற்று ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளால் போர்நிறுத்தம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு தரப்பினருக்கும் இடையில் பதற்றம் அதிகரிப்பதற்கும் பிரதான காரணமாக அமைந்துள்ளது.

எனவே, இந்த மாற்று ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் பொறுப்பு அரசாங்கத்துக்குரியது. இதன்மூலம் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியும்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்துவதை விடுத்து, அவை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து சிந்திக்க வேண்டும். சொல்லிலும் விட செயலில் கவனம் செலுத்துவதன் மூலம் அமைதியை நோக்கிய நம்பிக்கை தரக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டு நாடு மீளவும் யுத்தத்துக்குத் திரும்பாமல் பாதுகாக்க வேண்டியது இரண்டு தரப்பினரதும் பொறுப்பெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராசிக் குழு முன்னாள் உறுப்பினர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். முன்னாள் உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் கல்லடி ட்ரான்ஸ்போமர் சந்தியில் நேற்றுக்காலை 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினரான சின்னன் என அழைக்கப்படும் அருளம்பலம் சுந்தரலிங்கம் (வயது 36) என்பவரே இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

## விடுதலைப்...

தாக்குதல் மேற்கொண்டனர்.

5 முதல் 10 வரையான போராளிகள் தங்கியிருந்த இந்த முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் - முகாமுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலின் பின்னர் 4 போராளிகள் காணாமற்போயிருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு, திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும் இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்படவில்லை. திருகோணமலை நகரில் இருந்து 20 கி.மி தென்மேற்குத் திசையில் தம்பலகாமத்துக்கு இடையில் கடவானைக்குளம் உள்ளது. பத்தினிபுரத்தில் உள்ள கடற்படை முகாமுக்கு முன்பாக உள்ள சூனியப் பிரதேசத்துக்கு அப்பால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே இந்த மினிமுகாம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

A/L 2008
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்
கலை வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்:- 15.01.2006 ஞாயிறு
வர்த்தகம்:- 9.00மணி கலை:- 4.00மணி
Acc:- சீலன் Eco:- மோகன்
Bu.st:- உமாகாந் Log:- R.P. சர்மா
Tamil:- பாலா H.cu:- சந்திரன்
Drama:- சுதன் CHR:- கொலின்ஸ்
GEO: I.S.ஜெகன் P.Sc:- தீபன்

# யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழ்ச்செல்வன் நேற்றுச் சந்திப்பு!

கிளிநொச்சி —

யாழ். குடாநாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இந்தச் சந்திப்பு நேற்றுக் காலை 10 மணியளவில் பளையிலுள்ள யாழ். மாவட்ட நிர்வாகசேவை செயலகத்தில் நடைபெற்றது.

இதில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போது யாழ்.மண்ணில் இடம்பெறும் இராணுவத்தினரதும், அதனோடு சேர்ந்தியங்கும் துணைக் குழுவினரதும் அப்பாவி மக்கள் மீதான அநியாய படுகொலைகள், பெண்கள் மீதான பாலியல் அடாவடித்தனங்கள், அப்பாவி இளைஞர்கள் மீதான தாக்குதல்களையும் மறைமுகமான கைதுகளையும் சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்துவது தொடர்பான விடயங்கள் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

மக்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும், அவற்றை இனங்கண்டு - அவற்றைப் போக்குவதற்கான மாற்றுவழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பாகவும், இடம்பெயர்ந்துவரும் மக்களுக்கான உதவிகள் தொடர்பாகவும் -

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் அசம்பாவிதங்கள், அத்துமீறல்கள் ஆகியவற்றை உடனடியாக மக்கள் முறையிடுவதற்கான உடனடிச் செயலகங்கள் திறக்கப்படுவது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## இடம்பெயரும்...

வருகின்றன. இந்த நிலையில் இடம்பெயர்ந்துவருகின்ற மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உட்பட உள்ளூரில் இயங்குகின்ற நிறுவனங்களுக்கூடாக சர்வதேச தொண்டு நிறுவனங்கள் என்ற வகையில் இடம்பெயர்ந்து வருகின்ற மக்களுக்கு தங்களால் இயன்ற உதவிகளை வழங்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இது தொடர்பாக தமது தலைமைப்பீடங்களுடன் கலந்தாலோசித்து சாதகமான முடிவெடுப்பதாகத் தெரிவித்தனர்.

இந்தக்கலந்துரையாடலில் யு.என்.எச்.சி. ஆர், ஐ.சி.ஆர்.சி, ,போறூாட், கெயார், ஒக்ஸ்பாம், எஸ்.சி.எப், சொலிடார், வேல்ட்விசன், டெனிஸ் அகதிகள்பேரவை, ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் பணிப்பாளர் றஞ்சன் விடுதலைப் புலிகளின் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.பாவரசன் (தியாகராஜா), தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்டி, திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த மதி ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். இதேவேளை இது தொடர்பான இன்னொரு கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## படையினர்...

இதேவேளை - இந்தச் சம்பவத்தை அடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீதியால் சென்று கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

நீர்வேலியைச் சேர்ந்தவர்களான அருமைநாயகம் அனுசன் (வயது 21), பரமானந்தம் ரதிசங்கர் (வயது 23) ஆகியோரே காயமடைந்தனர். இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஆடியபாதம் வீதி ஊடாக போக்குவரத்தில் ஈடுபட்ட பலரும் படையினரால் தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் கொக்குவில் - குளப்பிட்டிப் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பாக தகவல்கள் வெளியாகவில்லை.

இதனிடையே - நேற்றுமாலை 4.45 மணியளவில் இருபாலையில் இராணுவத்தினர் மீது இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலை அடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் அச்சுவேலியைச் சேர்ந்த தங்கராசா தவேந்திரதாஸ் (வயது 52) என்ற குடும்பஸ்தர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அமெரிக்க...

தேவைகள் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள வளத் தட்டுப்பாடுகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டதாக இராணுவ உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

## மல்லாகம்...

கைதுசெய்திருப்பதாகத் தெரிய வருகிறது. ரியூசனுக்குச் சென்ற தனது பிள்ளைகளைக் கூட்டிவரச் சென்றபோதே இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நேற்றும் 9 அகதிகள் தமிழகம் சென்றனர்!

சென்னை —

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு இரண்டாவது நாளாகவும் அகதிகள் சென்றடைந்தனர்.

நேற்றுக்காலை இராமேஸ்வரத்தைச் சென்றடைந்த 9 அகதிகளும் மண்டபம், அகதிமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

3ஆண்கள், 3பெண்கள், 3 குழந்தைகள் என மொத்தம் 9பேர் நேற்றும் தமிழகம் சென்றுள்ளனர். இவர்கள் பேசாலையிலிருந்து இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் ஏழாயிரம் ரூபா பணம் கொடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவித்தனர். பெருமளவானோர் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து செல்லக் காத்திருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## கண்காணிப்புக்குழு அலுவலகம்மீது கைக்குண்டுத் தாக்குதல்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் மீது இன்று அதிகாலை இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதிகாலை 12.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் கண்காணிப்புக் குழுவின் வாகனங்களும் அலுவலகமும் சேதமடைந்தது. இந்தச் சம்பவம் தமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலெப்ஸ் டோட்ரயர் தெரிவித்தார்.

## காவலரண்கள்...

நினைத்தவர்கள் யாவரும் அடங்கிப் போனதும் வரலாறு.

இவ்வாறு தமிழருக்கு எதிராக சூளுரைத்தவர்களும், வீராப்புப் பேசியவர்களும், போர்முரசு கொட்டியவர்களும் தமிழ்மக்களின் ஒன்று திரண்ட பலத்தின் முன்னால் மண்டியிட்டு, இருந்தஇடம் தெரியாமல் மறைந்ததுதான் சிங்களத்தின் வரலாறு.

இந்த வரிசையில் நின்று - பழைய பல்லவிக்கு புதிய மெட்டமைத்து, சிங்கள தேசத்துக்கு மங்களம் பாடப் புறப்பட்டுள்ளார் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா. சிங்களத்தின் இன்னுமொரு சப்புமல் குமரராக தன்னை நிலைநிறுத்த முயலும் சரத் பொன்சேகா - தமிழர் தரப்பைப் பற்றி தப்புக் கணக்குப் போடுவதுதான் வேடிக்கை.

தமிழ்மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புப் போரில் களம் பல கண்டதாகத் தன்னைப் பற்றிப் பிதற்றிக்கொள்ளும் இந்த மேஜர் ஜெனரல் அக்காலங்களில் தானும், தனது படையணிகளும் வாங்கிக்கட்டிக்கொண்டதை மறந்து பிதற்றுவதுதான் பரிதாபம்.

எவராலுமே எளிதில் அறியப்பட முடியாத புலிப்படையின் எண்ணிக்கையை வெறும் 5 ஆயிரம் மட்டுமே என அரிச்சுவடி படிக்கும் இந்தத் தளபதி - யாராலுமே வெற்றிபெற முடியாதென மார்தட்டிநின்ற ஆனையிறவுத் தளத்தில் நின்றும், ஜெயசிக்குறுவில் இருந்தும் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என தலைதெறிக்க ஓடியதை மறந்தது ஏனோ?

சுங்கான் ஒன்று பற்றி முடிப்பதற்குள் சாரம் கட்டிய சில நூறு பெடியங்களை அழிப்பேன் என்றும், சிங்களப் படையைக் கண்டதும் பயத்தில் சிறுநீர் கழிக்கும் சிறுவர் படையென்று ஏளனம் செய்தவர்களும் தமிழீழ மக்களிடமிருந்து கற்ற பாடத்தை புதிய இராணுவத் தளபதி கேட்டுப் படிப்பது அவருக்கும், அவரது நாட்டுக்கும் நல்லது.

சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் பொங்கியெழும் மக்கள் படையினராகிய எமது தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க முடியாமல் திணறும் சிங்கள இராணுவம், பின்னர் அப்பாவி மக்களைப் படுகொலை செய்கிறது.

சிறுவர்களையும், அப்பாவி இளைஞர்களையும் கைதுசெய்து, பின்னர் சுட்டுக்கொன்றுவிட்டு அவர்களது உடல்களை வீசி எறிகின்றது. சோதனை என்ற பேரில் வீடுகளுக்குள் புகுந்து எமது சகோதரிகளையும், தாய்மார்களையும் இம்சை செய்கிறது.

மக்கள் படையினராகிய நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் எம்மை வெளிப்படுத்தியுள்ளோம். இருந்தும் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழிப்பதன் மூலம் எமது தாக்குதல்களையும், விடுதலை உணர்வையும் ஒடுக்கலாமென சிங்கள இராணுவம் கனவு காண்கிறது. அது வெறும் பகல் கனவு என்பதை இராணுவம் விரைவில் உணரும்.

இனிவரும் காலத்தில் எமது தாக்குதல்களை விரிவுபடுத்தவுள்ளோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
CIMA
Foundation & Managerial Level
ஆரம்பம் - 15.01.2006 9.30a.m
aat (Srilanka)
Medium - Tamil &English
ஆரம்பம் - 15.01.2006 9.30a.m
Further Details:
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
(சி-5006)

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தைப்பொங்கல் சிறப்பிதழ்

## தமிழர் பண்பாட்டை பறைசாற்றும் தைப்பொங்கல் திருநாள்..

"தைபிறந்தால் வழிபிறக்கும்" எல்லோர் வாழ்விலும் புதிய புதிய மாற்றங்கள் மலரும் என்ற எதிர்பார்ப்போடு தை முதலாந் திகதி அதாவது தமிழ்ப் புத்தாண்டு பிறக்கின்றது. இத்திருநாளிலே தைப் பொங்கல் பண்டிகையை எல்லோரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்கின்றோம்.

வையத்தில் மாந்தர் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் சூரியனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி பொங்கல் நிறைவேற்றி, படையல் வைத்து, மடை பரவி வழிபாடு செய்கின்றோம்.

தைமாதம் முதல் நாளை (முதலாம் திகதியை) மகரசங்க ராந்தி என்பர் உத்தராயணம் தொடங்கும் நாளும் அதுவே. தென்திசையிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் திரும்புவதை உத்தராயணம் குறிக்கும். தைதொடக்கம் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயணம் புண்ணிய காலம் என்றும் சுபகருமங்கள், மங்கள காரியங்கள் நிகழுகின்ற காலம் எனவும் கொள்ளப்படுகின்றது.

உழைப்பின் உயர்வை, உழவர்களின் மேன்மையை மதிக்கும் விழாவாகவும், தைப்பொங்கல் விழா பண்டுதொட்டு விளங்கிவருகிறது. மனித உழைப்பாளிகளுடன், விலங்கு உழைப்பாளிகளையும் நினைத்து நேசித்து நன்றி செலுத்தும் பெருநாளாகவும் தைப்பொங்கல் பண்டிகை விளங்குகின்றது.

பொங்கல் திருநாளன்று சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகைக்கு முன்னர் அதிகாலையில் மக்கள் நித்திரை விட்டு எழுந்துவிடுவர். நீராடித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வர். வீட்டு முற்றத்தில் சாணத்தினால் மெழுகப்பட்ட நீள் சதுரமான பகுதியை வெள்ளை, சிவப்பு நிற மாவினால் அழகிய கோலம் இட்டு மண்டபமாக வடிவமைத்துக் கொள்வர், மாவிலை, வாழை, கமுகு, கரும்பு, மகர தோரணங்கள், மலர்கள் என்பவற்றால் அலங்கரிப்பர். அதனுள் அழகிய கோலங்களையும் கலைத்திறன் மிளிரப் போடுவர். பிள்ளையார் பிடித்துவைத்து, குத்து விளக்கேற்றி, பூரண கும்பம் வைத்து, பழங்கள், வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலிய மங்களப் பொருட்களை நிவேதிப்பர்.

நீரினால் சுத்தம் செய்யப்பட்ட புதுப்பானையை திருவணையில் வைத்து அதன் வாய்ப்புறத்தில் மஞ்சள் இலை, இஞ்சியிலை, மாவிலை ஆகியவற்றைப் பொருத்திக் கட்டி பானையின் மேற்புறத்தில் திருநீற்றைக் குழைத்து திரிபுண்டரமாக மூன்று இடங்களில் பூசிசந்தனம், குங்குமம் திலகமிட்டு பானைக்குள் பசுப்பாலும் நீரும் விட்டு நிரப்பி, தூபதீபம் காட்டி, கற்பூரதீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கிப் பற்றவைத்து கணவனும், மனைவியும் ஒருமித்த சிந்தையராய் சூரியனை வணங்கி இஷ்ட தெய்வங்களை நினைந்து பானையைப் பக்குவமாய் இருவரும் தம் கைகளில் பற்றிப் பிடித்துத் தூக்கி அடுப்பில் ஏற்றுவர்.



பானையில் பால் பொங்கியெழும் போது "பொங்கலோ பொங்கல்" என்று உரத்துக் கூவி மகிழ்வர். தம்முடைய வாழ்வில் இன்பம் பொங்கப் போவதை உணர்த்தும் அறிகுறியாகப் பால் பொங்கி ஓங்கி எழுதலைக் கண்டு அவர்களின் மனமும் பொங்கிப் பூரிக்கும். பால் பொங்கி வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும், ஈசானத்தை நோக்கியேனும் முதலில் சரிந்து வெளித்தள்ளினால் அதனை நன்நிமித்தமாகக் கருதிப் புளகாங்கிதம் கொள்வர். அதன் பின்னர் குடும்பத் தலைவர் புதுநெல் குற்றியெடுத்த பச்சரிசியை தம் இருகைகளாலும் அள்ளி, சூரியபகவானை வழிபட்ட வண்ணம் பானையின் வாய்விளிம்பினை மும்முறை சுற்றி பானையுள் இடுவர். தொடர்ந்து குடும்பத் தலைவர், குடும்பப் பெரியவர்கள், பிள்ளைகள் என்போர் அரிசியைப் பானையில் இடுவர் வெல்லம் கற்கண்டு, நெய், தேன், கருப்பஞ்சாறு, திராட்சை, முந்திரிப் பருப்பு, பயற்றம் பருப்பு என்பவற்றைப் பாலுடன் கலந்து விட்டு தித்திக்கும் இனிய பொங்கலை ஆக்குவர்.

பொங்கிய அமுதினை மூன்று தலைவாழையிலைகளில் படைத்து பழங்கள், கரும்பு, செவ்விளநீர், மலர்கள், முதலியவற்றைக் கொண்டு மடைபரவி, தேங்காய் உடைத்து வைத்து, நீரும் மலரும் கொண்டு அர்ச்சித்து, தூபதீபம் காட்டி, பக்தி சிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணஞ் செய்து சூரியபகவானை வணங்கி வழிபாடு செய்துவருகின்ற முறை சைவப்பெருமக்களிடையே காலாகாலமாக பேணப்பட்டு வருகின்றது.


தைப்பொங்கல் தமிழ் மக்களின் பண்பாட்டுப் பெருவிழாவாக வருடத்தின் ஆரம்பத்திலே நிகழ்வது இன்றியமையாததொன்றாகும்.

மதுரகவி காரை,
எம்.பி.அருளானந்தன்



# யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்கள்

# நேற்று 2 மணிநேரம் பணிப் புறக்கணிப்பு !



யாழ்ப்பாணம் —

யாழ்.பேதனாவைத்தியசாலை பணியாளர்கள் நேற்று இரண்டு மணி நேரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பணியாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கடமை நேரத்தில் வெளியாட்களால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து - சுமார் 450 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

நேற்று முன்தினம் இரவு வெளிநோயாளர் பிரிவில் கடமையில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் - வெளியில் இருந்து வாகனம் ஒன்றில் நோயாளரைக் கொண்டு வந்த நபர் ஒருவர் மிலேச்சத்தனமாகத் தாக்கிவிட்டு, தான் ஏற்றி வந்த நோயாளரை முதலில் விடுதிப் பக்கம் கொண்டு சென்ற பின்னர் மீண்டும் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

பணியாளர் வெளியாட்களால் தாக்கப்பட்டதையும் இனிமேலும் இத்தகைய சம்பவம் வைத்தியசாலையில் நடைபெறக்கூடாது எனக் கோரியே இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடைபெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக போதனா வைத்தியசாலை ஊழியர் சங்கத்தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் - யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையிலும் எமது பணியாளர்கள் தமது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையிலும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்குடன் தமது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் ஊழியர்கள் மீது வெளியாட்கள் தாக்குதல் நடத்தி அவர்களைப் பயமுறுத்தும் செயற்பாடானது மிகவும் கவலைக்குரிய ஒருவிடயமாகவே நாம் கருதுகின்றோம்.

வைத்தியசாலைப் பொறுப்பில் உள்ள ஊழியர்கள் பற்றாக் குறையாக இருக்கின்றபோது ஊழியர்கள் வேலைப்பளுவையும் கருத்திற் கொள்ளாது தமது சேவையைச் செய்து வருகின்றனர்.

வைத்தியசாலையில் பணிபுரிந்த எந்தவொரு பணியாளராருக்கும் நோயாளியை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி நன்றாகவே தெரியும்.

தற்போது கடமையில் ஈடுபட்டிருக்கின்ற பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீதத்திலும் பார்க்க அதிகமான நோயாளர்கள் ஒவ்வொரு நாளும் சிகிச்சைக்காக வருகின்ற போது பணியாளர் பற்றாக்குறை இருப்பதால் இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி நேரிடுகின்றது.

வைத்தியசாலை வேலையாட்கள் தாக்கப்படுவதை நாம் தொடர்ச்சியாக அனுமதிக்க முடியாது. இனிமேல் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றால் முழு அளவில் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடத் தயங்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் நாவற்குழியைச் சேர்ந்த பிரான்ஸிஸ் நெல்சன் (வயது 34) என்பவரே படுகாயமடைந்த நியையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## சமுத்தி அலுவலர்கள் மூலம் சுமார் 84 லட்சம் ரூபா செலவில் சண்டிலிப்பாயில் அபிவிருத்தி !

சுதுமலை —

வலி. தென்மேற்கு - சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 28 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் பிரிவுகளிலும் தலா மூன்று லட்சம் ரூபா ஒதுக்கீட்டில் பல அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

கைத்தொழில் அபிவிருத்தி, மக்கள் கருத்திட்டம் சந்தைப் படுத்தல் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, மீன்பிடி அபிவிருத்தி ஆகியவற்றுக்கு ஒவ்வொரு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரும் - மூன்று லட்சம் ரூபாவுக்கான திட்டத்தை வழங்கும்படி பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

28 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் பிரிவுகளிலும் மூன்று லட்சம் ரூபாவுக்கான திட்டம் நிறைவேற்றப்பட்டால், வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பிரிவில் 84 லட்சம் ரூபா செலவிலான அபிவிருத்திநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (91)

## கோழிகளுக்கு அம்மைநோய் தடுப்பூசி

உடுவில் —

பனி காலம் ஆரம்பமாகியிருப்பதால் கோழிக்ளுக்கு அம்மை நோய் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இந்த நோய் ஏற்பட்டால் கோழிகள் விரைவில் மரணமடையலாம். எனவே, இதற்காக ஒவ்வொரு புதன் கிழமையிலும் வலிதெற்கு கால்நடை வைத்திய நிலையத்தில் அம்மைநோய் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

எனவே, பண்ணையாளர்களும், வீட்டில் கோழி வளர்ப்பவர்களும் அம்மைநோய் தடுப்பூசியை கோழிகளுக்கு ஏற்றுமாறு கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார். (101)

## பருத்தித்துறை முனைப்பகுதி படையினரால் சுற்றிவளைப்பு!

பருத்தித்துறை —

வடமராட்சி - பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் படையினர் பாரியளவிலான சுற்றிவளைப்பு தேடுதல்களை மேற்கொண்ட னர்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணிவரை நடைபெற்ற இந்தச் சுற்றி வளைப்புத் தேடுதலின் போது, வீடுகளுக்குள்ளும் படையினர் புகுந்து தேடுதலில் ஈடுபட்டனர்.

இதனால் மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர். வீடுகளிலும், வீதிகளிலும் நின்றோரும் படையினரின் கடும் சோதனைக்குள்ளாகினர்.

பருத்தித்துறை முனைப் பகுதி அடிக்கடி படையினரின் சுற்றி வளைப்புத் தேடுதலுக்குள்ளாவதால் அந்தப் பகுதி மக்களிடையே பெரும் அச்ச நிலை காணப்படுகிறது.

# இராணுவ வாகனங்களின் நடமாட்டத்தால் பாடசாலை செல்லும் மாணவர்கள் அச்சம்!

யாழ்ப்பாணம் —

தாக்குதல்களில் இருந்து தப்பிப்பதற்காக கனரக வாகனங்களில் தொடரணியாகப் படையினர் பயணிப்பதால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் பாதுகாப்பான நேரமாக பாடசாலை மாணவர்கள் வீதிகளில் பயணிக்கும் சனநெருக்கடியான வேளைகளைப் பயன்படுத்தி படையினர் ரேந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலைச் சமூகத்தினர் எனப்பலரும் மிகவும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ முகாம்களுக்கு உணவு, குடிநீர், மருத்துவ சேவைகள் வழங்கல், முகாம் அதிகாரிகளுக்கிடையிலான சந்திப்புகள், படையினரின் முகாங்களுக்கிடையிலான ஆளணி மாற்றம் என இராணுவத்தினரின் அனைத்து நடவடிக்கைகளையும் அண்மைக்காலமாக சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத நிலையில் படையினர் உள்ளனர் இதனால் தற்போது பாரிய யுத்த நடவடிக்கைகளில் துடுப்புகளை நகர்த்துவதைப் போல, யாழ்ப்பாண வீதிகளில் படையினர் கவச வாகனங்கள், துருப்புக்காவிகள் போன்ற தமக்குப் பாதுகாப்பான வாகனங்களிலும், கூடவே அம்புலன்ஸ் வண்டி, பாரந்தூக்கி பொருத்தப்பட்ட வாகனங்களும் பயணிக்கின்றன.

படையினர் பயணிக்கும் போது, வீதிக்காவல் கடமையில் நிறுத்தப்பட்டிருக்கும் படைச்சிப்பாய்கள் அத்தருணத்தில் வீதிப்போக்குவரத்தில் ஈடுபடும் நடைபயணிகள் மற்றும் வாகனங்களை வீதியோ ரத்தில் மறிக்கப்பட்டு - பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புக்கு மாணவர்களும் பொதுமக்களும் பணயம் வைக்கப்படுகின்றனர்.

அத்துடன் படையினரின் வாகனங்கள் - பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் நேரத்தில் மிக அதிகவேகமாகவும், நிதானமற்ற முறையிலும் படையினரால் செலுத்தப்படுகிறது. இந்த நிலையால் மாணவர்கள் குடாநாட்டில் அச்சத்துடனேயே பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

கடந்த காலங்களில் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் இராணுவ வாகனங்களினால் மோதிக் கொல்லப்பட்ட நிலையில் - தற்போதும், குடாநாட்டில் உள்ள சிறிய வீதிகளில் பாரிய கனரக இராணுவ வாகனங்கள் பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் நேரங்களில் பயணிப்பதைத் தவிர்க்க வேண்டும் என பொது மக்கள் தரப்பில் கருத்து நிலவுகிறது.

மேலும் இவ்வாறான இராணுவத்தினரின் நடவடிக்கைகளைக் கண்டு, பாடசாலைக்கு வரும் மாணவர்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாதவாறு உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவதாகவும் ஆசிரியர்கள் கவலை தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் வழிப் பயண பாதுகாப்புக்காக வீதிக் காவலில் ஈடுபட்டுள்ள படையினரால், வீதி அருகில் மறிக்கப்பட்டு தமது பிள்ளைகள் நடத்தப்படும் விதம் குறித்தும் பெற்றோரும் விசனமடைந்துள்ளனர். (90)

## பரிசுத்த உபவாச ஜெபம்

மானிப்பாய் —

யாழ். இராசாவின் தோட்டம் அசெம்பிளி ஒவ் கோட் கிறிஸ்தவ ஆலயத்தின் பரிசுத்த உபவாச ஜெபக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இந்த ஜெபக் கூட்டம நடைபெறவுள்ளதாக ஆலயத்தின் பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார் . (100)

# முகமாலையில் பொது மக்கள் படையினரால் படம் பிடிப்பு !

முகமாலை —

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியூடாக யாழ்ப்பாணத்துக்கு வரும் பொது மக்களை இராணுவத்தினர் வீடியோப்படம் பிடித்து வருகின்றனர்.

வன்னி, வவுனியா மற்றும் கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து பேருந்துகளில் வந்து இறங்கி முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் வரிசையில் நிற்கும் போதே ஒவ்வொருவராக வீடியோ எடுத்து வருகின்றனர்.

இதேவேளை முகமாலை சோதனைச்சாவடியூடாக யாழ்ப்பாணத்துக்கு வரும் ஆண்களை இராணுவப் புலனாய்வுத் துறையினர் துருவித் துருவி விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், இளைஞர்களை மிரட்டியும் வருகின்றனர்.

மாலைநேரங்களில் வருவோரையும் நீண்டநேரமாக மறித்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதால், பொது மக்கள் பேருந்துக்களைத் தவறவிட்டு வருவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் முகமாலை சோதனைச் சாவடி ஊடாக செல்லும் பொது மக்கள் - அச்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இசைநாடா வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் —

கலாபூசணம், கலாரத்னா, அமரர் வீரமணி ஐயரின் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய 'புகழ்பாடும் மஞ்சவனப் பதியினிலே,' இசை நாடா வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 1 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசைநாடா வெளியீட்டு நிகழ்வுடன், நல்லூர் ராகம்ஸ் இசைக்குழுவின் இதயராகங்கள் இன்னிசை நிகழ்வும், நாதஸ்வர, தவில் மங்கள இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளதாக மஞ்சவனப்பதி முருகன் ஆலய இந்து இளைஞர்கள் தெரிவித்தனர். (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : சி.பகலவன்
முகவரி : புதுக்குடியிருப்பு.

அகவை ஒன்பது



பெயர் : ஜே.தானுசா
முகவரி : திருநெல்வேலி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு :

கூப்பனை பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# மக்கள் படையாக எழுந்துவிட்டோம் போருக்கு உடன் ஆணையிடுங்கள்!

## கிளிநொச்சி செல்வாநகர் மக்கள் தேசிய தலைவரிடம் வேண்டுகோள்

கிளிநொச்சி ———

பொங்கியெழும் மக்கள் படை யாக நாம் எழுந்து விட்டோம். போருக்கு விரைந்து ஆணையிடுங்கள் என தமிழீழ தேசியத் தலைருக்கு கிளிநொச்சி செல்வாநகர் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் 4 மணிக்கு செல்வாநகர் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் தாயகப் பிரதேசத்தில் இடம்பெறும் இராணுவ வன்முறைகளைக் கண்டித்து நடத்தப்பட்ட மாபெரும் கண்டனப்பேரணியிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அந்த வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

கிளிநொச்சி மாவட்ட செல்வா நகர் மக்களாகிய நாங்கள் சர்வதேச சமூகத்துக்கும், சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளுக்கும் எமது ஏகபிரதிநிதிகள் என - தமிழீழ விடுதலை புலிகளுக்கும், இவ்விடத்தில் நின்று காற்றலை ஊடாக விடப்படும் அறைகூவல் இது.

தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் இந்தத் தீவில் பல தசாப்தங்களாக சிங்கள, பௌத்த பேரினவாத, அரச பயங்கரவாத நயவஞ்சகத் தீயில் சிக்குண்டு - உயிர்களையும், உடைமைகளையும் இழந்து அகதியாகவும், அநாதைகளாகவும், வதிவிடங்களையும் விட்டு, நடைப்பிணங்களாக வீதியில் எரிக்கப்பட்டோம்.

இதனை மாற்றி அமைத்து, எமக்கான நிம்மதியான, நிரந்தரமான, சுதந்திரமான வாழ்வைப் பெற்றுத் தந்திடவே எமது தேசிய தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் எமது இன விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டு, சிங்கள பௌத்த பேரினவாத அரசுக்கெதிராக பல இராணுவ வெற்றிகளையும், அரசியல் வெற்றிகளையும் ஈட்டினோம்.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் சர்வதேச நாடுகளின் முன்னிலையில், சிங்கள அரசுடன் எமது தேசியத் தலைவரால் எழுதப்பட்ட ஒப்பந்தத் தின் தன்மைகள் இன்றுவரை நிறைவேற்றப்படாமையும், தொடர்ந்து சர்வதேச நாடுகளின் முன்னிலையில் - சிங்கள பௌத்த பேரினவாத அரசின் முத்திரைகளை வெளிக்காட்டி வருகிறது.

அதன் வெளிப்பாடாகவே ஆரம்பகாலத்தில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபட்ட அரசியல் போராளிகள் மீதான படுகொலைகளைச் செய்தும், மாமனிதர்கள், நாட்டுப் பற்றாளர்கள், மாணவர்கள், பொது மக்கள் மீதான படுகொலைகள் செய்து வருவதையும், இளைய தலைமுறைகளைக் கடத்தியும், பலாத்கார வன்முறைகளையும் புரிந்து கொண்டுவரும் சகல நிகழ்வுகளும் நிதர்சனமாக வெளிப்படுகிறது.

இத்தனையையும் நாம் பார்த்து பொறுமைகாக்க முடியாது. பொங்கியெழ வேண்டிய காலம் வந்து விட்டது. எனவே, சர்வதேசமே இத்தனை விளைவுகள் இந்தச் சமாதான காலத்தில் நடந்ததை நீங்கள் கைகட்டிப் பார்த்து நிற்பது எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது.

நீங்கள் மனிதகுல மாண்பின் - தர்மத்தின் பக்கம் நில்லுங்கள். உண்மைகளை உலகிற்கு எடுத்துரைத்து உதவுங்கள். எமது சுதந்திர தாகத்தின் வெளிப்பாடு தாயகம். தேசிய, சுயநிர்ணய உரிமை எமக்கு கிடைக்க வழிசமைத்து, அத்தோடு எமது பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சர்வதேச நாடுகள் விதித்திருக்கும் தடைகளை நீக்குவதற்கு உரிய நடைமுறை மேற்கொண்டு, மனித நீதியை நிலைநிறுத்துங்கள்.

சிங்கள பௌத்த பேரினவாத அரசே - சித்தாந்த கோட்பாட்டில் இருந்து விடுபட்டு மனித தர்மத்தின் பக்... நிற்க முயற்சி செய்து, நீ செய்த அநீதிகளையும், ஆக்கிரமிப்புக்களையும், படுகொலைகளையும், மனித புதைகுழிகளையும் நிகழ்த்திய வடுக்களையும் நாம் மறப்போம். தொடர்ந்து சமாதான காலத்தில் நீர் செய்து வரும் படுகொலை, கைதிகள் காணாமல் போகச் செய்தல், ஆள்கடத்தல், பாலியல் வன்முறைகளையும் மன்னிக்க மாட்டோம்.

நீ உனது காடைத்தனமான செயலை நிறுத்து. உனது படைகளை எமது தாயக நிலத்திலிருந்து வெளியேற்றி உனது நாட்டில் நிம்மதியாக வாழ முடிவு செய். இல்லையேல் எமது பொங்கி எழும் மக்கள் படையாலும், தமிழ் மக்களின் ஏக பிரதிகளாலும் வெளியேற்றப்படுவாய் என்பதை உணர்ந்துகொள். முடிவை நீயே விரைந்து எடு. இதுதான் உனது இறுதி சந் தர்ப்பம்.

எமது தேசிய தலைவரே! பொறுமைகாத்தது போதும் எழுவோம். இனியும் எமது உறவுகள் காணாமல் போவதையும், பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் பலாத்கார வன்முறைகளையும் பார்த்து அமைதிகாக்க முடியாது. பொங்கி எழ நாம் தயார்.

பொங்கியெழும் மக்கள் படையாய் நாம் எழுந்து விட்டோம். விரைந்து ஆணையிடுங்கள் எமது தாயக தேசத்தை மீட்க எதிரியை அழித்து எமது மக்களையும் சுதந்திர காற்றையும் சுவாசிக்கச் செய்ய வேண்டும். பொங்கியெழுவோம் பகை முடிக்க பொங்கியெழுவோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூங்கா திறப்பு!

கிளிநொச்சி ———

தைப்பொங்கல் தினமான இன்று - மாலை 4 மணிக்கு கிளிநொச்சி திருநகரில் மலரவன் மழலைகள் பூங்கா திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## ஆவண காப்பகத்தின் இலவச கல்வி சேவை

கிளிநொச்சி ———

கிளிநொச்சி டிப்போ வீதி மத்திய சந்தைக்கு அருகாமையில் உள்ள தமிழீழ ஆவண காப்பகத்தால் மாணவர்களுக்கான இலவச கல்விச் சேவை ஒன்று - நாளை காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரம், உயர்தரம் உட்பட அனைத்து மாணவர்களும் இந்த இலவச கல்விச் சேவை மூலம் பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இலவசக் கல்விச் சேவையில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இணைத்து - இந்தச் சேவை சிறக்கவும், தொடரவும் உதவுமாறும் பெற்றோர்களைக் கேட்டுள்ளனர்.

பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறவுள்ள இந்த இலவசக் கல்விச் சேவையானது-

மாணவர்களது வசதி கருதி வேறு ஒரு நாளுக்கும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தமிழீழ ஆவண காப்பகத்தினர் அறிவித்துள்ளனர்.



அண்மையில் வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் மற்றும் உயர்தர பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் பாடசாலை அதிபர் எல்.எப். நடேசமூர்த்தி நினைவுப் பரிசு ஒன்றைப் ட... தம அதிதி ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். படம் - கனகரவி

## மன்னாரில் இராணுவத் தளபதியுடன் ஆயர் குழுவினர் சந்தித்துப் பேச்சு!

மன்னார் ———

மன்னாரில் படையினரின் கெடுபிடிகள் குறித்து - மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையிலான குழுவினர், மாவட்ட இராணுவத் தளபதியை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினர்.

மாவட்ட இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், மன்னார் மாவட்ட அரச அதிபர் வே.விஸ்வலிங்கம், மன்னார் நகர பிரதேச செயலாளர் ஸ்ரான்லி டி.மெல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்கள் படைத்தரப்பால் மக்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள், மீனவர்கள் தொழிலில் ஈடுபடும்போது- கடற்படையினரால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சோதனை கெடுபிடிகள் உள்ளிட்ட மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து பிரிகேடியர் பெர்னாண்டோவிடம் விளக்கமளித்தனர்.

அண்மைக்காலமாக மன்னாரில் படையினரால் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள், பாஸ் கெடுபிடிகள், அடையாள அட்டை சோதனைகள் என்பன அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றாடல் சுகாதாரம் பேணுமாறு சுகாதார சேவையினர் கோரிக்கை!

கிளிநொச்சி ———

தாயகப் பிரதேசத்தில் உள்ள அனைத்து வீடுகள், நிறுவனங்கள் யாவும் - சுற்றாடல், சுகாதாரம் பேணப்படவேண்டும் என தமிழீழ சுகாதார சேவையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக சுகாதார சேவையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

தாயகப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு வீடுகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள் யாவும் சுற்றாடல், சுகாதாரத்தைப் பேண வேண்டியது அவர்களது கடமையும், பொறுப்புமாகும். இவ்வாறு அனைவரும் சுற்றாடல் சுகாதாரத்தைச் சீரிய முறையில் நிறைவேற்றி, தாயகப் பிரதேசத்தை அழகுள்ளதாகவும், சுகாதாரமானதாகவும் ஒளிரச் செய்யும் வகையில் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

அத்துடன், புதிய கட்டடங்கள் அமைக்க விரும்புவோர் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகத்தில் - சனிக்கிழமை தோறும் காலை 9 மணி தொடக்கம், 12 மணிவரையான நேரத்தில் கட்டடங்கள் அமைப்பது சம்பந்தமான இலவச ஆலோசனைகளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறு சுகாதார சேவையினர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பனையோலை பொருள் கண்காட்சி!

கிளிநொச்சி ———

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் 13 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி கிளிநொச்சியில் பனையோலை உற்பத்திப் பொருள் கண்காட்சி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் எதிர்வரும் 16 ஆம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்தக் கண்காட்சி நடைபெறும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடற்படையினரின் கெடுபிடிகளை அடுத்து மன்னார் - பேசாலைப் பகுதியிலிருந்து 200 மீனவ குடும்பங்கள் இடப்பெயர்வு!

மன்னார் ———

கடற்படையினரின் கெடுபிடிகள் காரணமாக- மன்னார் பேசாலை சிறுதோப்பு பகுதியிலிருந்து 200 மீனவர் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

கடற்படையினரின் நெருக்கு வாரங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை அடுத்தே, மன்னார் நகரில் இருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள வங்காலைப் பகுதிக்கு அவர்கள் இடம்பெயர்ந்துள்ள னர்.

தங்களது படகு, மீன்பிடிவலை உள்ளிட்ட மீன்பிடித் தளபாடங்கள் சகிதம் இவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சிறுதோப்பை அண்மித்த பகுதியில் கடற்படை முகாம் அமைந்துள்ளது. இந்த மக்கள் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பகுதியில் குடியேறி இருந்தனர்.

கடந்த டிசம்பர் 23 ஆம் திகதி கடற்படையினர் மீதான தாக்குதலையடுத்து மீனவர்களை அச்சுறுத்துவதும், துன்புறுத்துவதும் போன்ற அட்டூழியங்களில் கடற்படையினர் ஈடுபட்டனர். இதனையடுத்தே அனைத்து மக்களும் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

## கிளிநொச்சி உணவகங்களில் சுகாதாரசேவையினர் ஆய்வு!

கிளிநொச்சி ———

தமிழீழ சுகாதார சேவையினரால் கிளிநொச்சி நகரிலும், நகரை அண்டிய பகுதியிலும்- உணவு, சுற்றாடல், சுகாதாரச் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவையினரின் விசேட நடவடிக்கைப் பிரிவினரால் கிளிநொச்சி நகரிலும், நகரை அண்மித்த பகுதிகளில் அமைந்துள்ள உணவு கையாளும் நிலையங்களும், உணவு தொடர்பான நிலையங்களும்- சுற்றாடல், சுகாதார ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

ஆய்வின்போது உணவு சுகாதாரத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடிய நிலையில் காணப்பட்ட உணவகம் ஒன்று உணவு தயாரிப்பு செயற்பாடு நிறுத்தப்பட்டு மூடப்பட்டதுடன், உணவு சுகாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் காணப்பட்ட உணவு கையாளும் நிலையங்களுக்கு அடையாள குற்றப் பணமும் அறவிடப்பட்டது.

அத்துடன் சந்தைப் பகுதியில் சுற்றாடல், சுகாதாரம், கழிவகற்றல், பொதுமலசலகூட சுகாதாரம் என்பன ஆய்வு செய்யப்பட்டு - சம்பந்தப்பட்ட நிலையங்கள், நிறுவனங்கள், திணைக் களங்கள் என்பன வற்றுடன் கலந்துரையாடி. சீர்செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பகைமைகள் அழிந்து, உறவுகள் மேம்பட பொங்கலே பொங்கி எழுந்திடுவாய்!



யாழ்.நகரில் தரமான வோல் ரைல்ஸ், புளோர் ரைல்ஸ், குளியலறைப் பொருட்களை கடந்த 25 வருடங்களாக விற்பனை செய்பவர்களும் மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கிளாஸ் வகைகள், அன்பளிப்புப் பொருட்களின்

முன்னோடி விற்பனை நிலையம்

விமாகி



யாழ்.நகரில் :
27/3, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : 021 222 6738

அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்



இல்லத்தரசிகளின் நம்பிக்கையான தெரிவுகள்

அன்னா தயாரிப்புகள்

House Wives Trusted Choice
ANNA PRODUCTS




Manufactured & Distributed by
ANNA INDUSTRY - INUVIL
TEL : 021 - 222 3565, 021 - 222 5701

அன்பர்கள் அனைவருக்கும் எமது இனிய தித்திக்கும் பொங்கல் நல் வாழ்த்துக்கள்

மலிவு விற்பனை! மலிவு விற்பனை!!



மாணவ மணிகளே! பாடசாலை அதிபர்களே!

புத்தாண்டையொட்டி 10% தொடக்கம் 50% வரை விசேட கழிவு வழங்கப்படுகின்றது.

எங்கள் ஸ்தாபனத்தில் சகலவிதமான புத்தகங்கள், தர உள்ளீட்டுப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், மாணவ பயன் பாட்டுப் பொருட்கள், உங்கள் தேவை எதுவாயினும் பெற்றுக்கொள்ளலாம்.

2006 ஆம் ஆண்டுக்கான எங்கள் மலிவு விற்பனை தை மாத இறுதிவரை நடைபெறும்.

எந்தப் பொருட்களானாலும் தரமாகவும், உத்தரவாதத்துடன் பொருட்கள் உங்கள் காலடியில் கிடைக்குமாறும் ஏற்பாடு செய்பவர்கள்.

46 வருடங்களாக இலங்கைத் தீவு எங்கிலும் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கி இலட்சக்கணக்கான வித்தகர்களை உருவாக்கிய ஸ்தாபனம்.

எங்கள் ஸ்தாபனம் பணம் மட்டும் சேர்க்கும் நிறுவனம் அல்ல. ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

டிசம்பர் 10 ஆம் திகதி முதல் ஜனவரி 30 ஆம் திகதி வரை சனிக்கிழமை முழுநாளும் ஞாயிறு 3.00 மணி வரைக்கும் உங்களுக்காக திறந்திருக்கும்.



ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212 - 214, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 - 222 5542

உழவர் திருநாள் தனில் உழைக்கும் மக்களுக்கு உளமார்ந்த வாழ்த்துக்கள்

K.P கேற்றறிங் சேவிஸ் & ரவல்ஸ்

யாழ் - கொழும்பு - யாழ் சேவை

24 Hours SERVICE

சகலவிதமான மங்களகரமான வைபவங்களுக்கும் குறித்த தவணையில் குறித்த இடத்தில் உடனுக்குடன் சைவ, அசைவ உணவுகள் வழங்கப்படும்.




Jaffna - Colombo - Jaffna & All Ceylon (tour) Ac/Non Ac

K.P பயண சேவை

K.P TRAVELS

T.P : 021 - 222 3038, 0777 731874, 0777 111725, 0773 068864

Sangarathai Junction, Vaddukoddai

சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.

சமாதானம் உதித்திட தைத்திருமகளே வழிகாட்டு!

தரமான, சுவையான, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சைவ உணவு வகைகளையும், சிற்றுண்டி வகைகளையும் எங்கே வாங்கிக்கொள்வது என நினைக்கிறீர்களா?

நினைத்ததும் விரையுங்கள், சுவையுங்கள்.

ஸ்ரீ தாமோதர விலாஸ்



401, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 6867

அனைவருக்கும் எமது உழவர் திருநாள் வாழ்த்துக்கள்

சகலவிதமான கால்நடை தீவனங்கள் மற்றும் மருந்துவகைகள், கோழி இறைச்சி வகைகள், முட்டைகள் ஆகியவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உழவு இயந்திரம், முச்சக்கரவண்டி உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.



சுப்பிரமணியம் சென்ரர்

சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.

T.P : 0777735474

மக்கள் மனதில் சாந்தியும் சமாதானமும் பொங்கிப் பெருக,
இத்தைப்பொங்கல் திருநாள் வழிவகுக்கட்டும்



கொமர்ஷல் வங்கி

உங்கள் நலமே எங்கள் நோக்கம்

துன்பங்கள் நீங்கி அனைவரினதும் வாழ்வில் இன்பம்
துளிர்த்திட தைத்திருநாளே வருக.

ஆரோக்கியமான வாழ்வுக்கு என்றும்
நினைவில் நிற்பது எமது தயாரிப்புக்களே

MOIL

Pure Gingelly Oil

சுத்தமான நல்லெண்ணெய்

தரமான எள்ளில் சுகாதார முறைப்படி
தயாரிக்கப் பெற்றது



A PRODUCT OF MULTI - OIL
INDUSTRIES LIMITED
INUVIL, SRI LANKA

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

- நவீன முறைகளில் கண்களைப் பரிசோதித்து சிறந்த கண்ணாடி களைப் பெற்றுக்கொள்ளவும்,
- இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்,
- உறுதியான பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.



எரிக்கணேஷ்

564,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இல.86 கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.
(பழைய பொலிஸ் நிலையம் முன்பாக)

இல.91, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

MOTHER AND BABY CARE



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத்திருநாள்
வாழ்த்துக்கள்

Iimporters & Retail Dealers of all kinds of Toys and Baby Items, Gift Items & Fancy Items











No. 108/1, Palaly Road,
Thirunelvely,
Jaffna.

Mobitel : 0777210414
0777631352

இல 108,பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.


தமிழீழ வைப்பகம்
எழில் கலையறிவு பொங்க
தங்கமா வளங்கள் பொங்க
தமிழ்ப் பொங்கல் பொங்க
பொங்கு தமிழ் பொங்கவே!
எதிர்காலத் தலைமுறையின் ஏற்றம் சிறக்கவும்
மக்கள் வாழ்வு வளர்ச்சி பெறவும்
துயர் துடை வளமான அவர் வாழ்வுக்கும்
இனிய நற்பொங்கல் நாளில்
வாழ்த்துகின்றோம்!
உங்கள் எண்ணத்தின் சின்னமாய்
புதிய நடைமுறைகளுடன் நம்பிக்கையுடன்
வளர்ச்சிப்பணி கருதி
உங்களின் உயிர் நாடியாய்
செயற்பட காத்திருக்கின்றோம்.
இன்று முதல்
தமிழரின் தாயக
மண்ணில் பிறக்கும்
குழந்தைகளுக்கு
தமிழ்ப்பெயர் சூட்டப்படின்
அமுதம் கணக்கு
தொடங்கி வழங்கப்படும்.
தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்